# அரசு ஊழியர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாத இதழ்

ஆசிரியர்: ஆ.செல்வம்

நவம்பர் - 2024

தனிப்பிரதி ரூ.20




**கோரிக்கைகள் நிறைவேறும் வரை,**
**உரிமைகள் மீட்கப்படும் வரை**
**போராட்டங்கள் தொடரும்.**

## போராட்டங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை போராட்டங்கள் மூலமாகவே எதிர்கொள்வோம்..

# தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி
# மாலை நேர தர்ணா 8.10.2024


திண்டுக்கல்


திருநெல்வேலி


வேலூர்


தருமபுரி


செங்கல்பட்டு


கிருஷ்ணகிரி


கடலூர்


நாமக்கல்


புதுக்கோட்டை


திருச்சி


சிவகங்கை


இராமநாதபுரம்

# அரசு ஊழியர்

மாத இதழ்

2024 நவம்பர்

மலர்:45 இதழ்:11

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர்: **மு.அன்பரசு**

ஆசிரியர்: **ஆ.செல்வம்**

ஆசிரியர் குழு:

**மு.அன்பரசு, மு.பாஸ்கரன், தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன், கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி, சா.டானியல் ஜெயசிங், சா.கோதண்டபாணி, அ.குபேரன்**

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி
9677003178



**முகவரி:**

பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com



**அச்சகம்:**

சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600002

**ஆண்டுச் சந்தா : ரூ.200**
**தனி இதழ் : ரூ.20**



இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனாங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.


# உள்ளே...


1. **கோரிக்கைகள் நிறைவேறும் வரை, உரிமைகள் மீட்கப்படும் வரை போராட்டங்கள் தொடரும். போராட்டங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை போராட்டங்கள் மூலமாகவே எதிர்கொள்வோம்**
   *தலையங்கம் ........................................4*
2. **அக்கா ஓர் வரம்** *....................................5*
3. **முத்து நகரில் பறிக்கப்பட்ட உரிமைகளை மீட்டு எடுக்கும் மாநாடு!**
   பொதுச் செயலாளர்
   மேசையிலிருந்து *..................................6*
4. **மாநில பிரதிநிதித்துவப் பேரவை அறிவிப்பு** *...........................................13*
5. **மாநில நிர்வாகிகள் தேர்தல் அறிவிப்பு** *........13*
6. **விலைவாசி உயர்வை ஈடுசெய்கின்றதா! அகவிலைப்படி உயர்வு?** *..........................14*
7. **ஒற்றை புள்ளியை நோக்கி நகர்கிறதா நிர்வாகம்** *...............................17*
8. **தீண்டாமைச் சுவர் அகற்றும் போராட்டம் - திருப்பூர்** *..........................20*
9. **அஞ்சலி** *.............................................21*
10. **வாசகர் கடிதம்** *....................................21*
11. **கண்களைக் கொஞ்சம் மூடிக் கொள்ளுங்கள்**.............................*22*
12. **மாவட்ட மாநாடுகள்** *............................23*
13. **"பூமிப்பந்து சந்தித்திராத போராட்டம்"**.......*30*
14. **தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி மாலை நேர தர்ணா** 8.10.2024 *..................31*

தலையங்கம்

## கோரிக்கைகள் நிறைவேறும் வரை, உரிமைகள் மீட்கப்படும் வரை போராட்டங்கள் தொடரும்

# போராட்டங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை போராட்டங்கள் மூலமாகவே எதிர்கொள்வோம்..

**தமிழ் நாட்டில் போராட்டங்களே நடைபெறக்கூடாது என தமிழ்நாடு அரசு முடிவெடுத்திருப்பதை போன்ற உணர்வை உண்டாக்கி இருக்கிறது. போராட்டங்களின் போது காவல் துறையின் செயல்பாடுகள்.**

தி ரேடியாலஜிகல் அசிஸ்டன்ட்ஸ் அசோசியேசன் சார்பாக 23 10 2024 அன்று நிலுவை கோரிக்கைகளை முன்வைத்து டிஎம்எஸ் வளாகத்தில் பெருந்திரள் முறையீடு இயக்கத்தை நடத்துவதென முடிவெடுக்கப்பட்டது. போராட்டத்தில் பங்கேற்க வந்த சங்க உறுப்பினர்களை கண்டுபிடிக்க 23.10.24 அன்று டி.எம்.எஸ். வளாகத்தில் நுழைப்பவர்கள் அனைவரையும் பரிசோதனை செய்த பிறகே காவல்துறை அனுமதித்தது. எக்ஸ்ரே ஊழியர்கள் என உறுதி செய்ததும் அவர்களை காவல்துறை கைது செய்தது. தாங்கள் முடிவெடுத்தபடி பெருந்திரள் முறையீடு செய்ய டிஎம்எஸ் அலுவலகத்திற்கு வெளியே கூடியவர்களை காவல்துறை சூழ்ந்து அவர்களிடம் இருந்த பேனரை பறித்து அங்கிருந்தவர்கள் அனைவரையும் காவல்துறை கைது செய்து காவல்துறை வாகனத்தில் ஏற்றச் சென்று மண்டபத்தில் அடைத்தது. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குனரின் அழைப்பின் பேரில் பேச்சுவார்த்தைக்கு சென்ற தி ரேடியாலஜிக்கல் அசிஸ்டன்ட்ஸ் அசோசியேஷன் மாநில நிர்வாகிகளை இயக்குனரின் பார்வையாளர் காத்திருப்பு அறையிலேயே அராஜகமான முறையில் கைது செய்து அழைத்துச் சென்றது காவல்துறை.

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குனர் அலுவலகத்தில் இருந்து பேச்சுவார்த்தைக்கு வருமாறு நிர்வாகிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட பிறகும் நிர்வாகிகளை அனுப்ப காவல்துறை மறுத்துவிட்டது. போராட்டத்தை வாழ்த்தி பேசுவதற்காக சென்ற தமிழ்நாடு அரசு ஊழிய சங்க மாநிலத் தலைவர் மற்றும் நிர்வாகிகளை காவல்துறை கைது செய்தது. இந்த நிகழ்வுகள் தமிழ்நாடு முழுவதும் அரசு ஊழியரிடையே மிகப்பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

- ♦ தங்களுடைய துறைத்தலைவரை சந்தித்து முறையீடு இயக்கத்தை நடத்த வந்தவர்களை வளாகத்திற்கு நுழைய விடாமல் தடுத்து நிறுத்தி கைது செய்தது.
- ♦ மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குனர் பேச்சுவார்த்தைக்கு அழைத்த பிறகும் நிர்வாகிகளை பேச்சுவார்த்தைக்கு அனுப்ப மறுத்தது.
- ♦ இயக்குனரின் பார்வையாளர் அறையில் நுழைந்து அங்கே இருந்த நிர்வாகிகளை கைது செய்தது.
- ♦ பெருந்திரல் முறையிட்டினை வாழ்த்தி பேசச் சென்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில தலைவர் மற்றும் நிர்வாகிகளை கைது செய்தது ஆகிய காவல்துறையின் அடக்குமுறை நடவடிக்கைகளை கண்டித்து தமிழ்நாடு முழுவதும் அரசு ஊழியர் சங்கம் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது.

கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்ற பிறகு அரசு ஊழியர் சங்க மாநில தலைவர் மற்றும் நிர்வாகிகள் விடுவிக்கப்பட்டனர். தி ரேடியாலஜிகல் அசிஸ்டன்ட் அசோசியேஷன் நிர்வாகிகள் பேச்சுவார்த்தைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பேச்சுவார்த்தை சமூகமாக நடைபெற்று பல கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. மீண்டும் ஒருமுறை போராட்டத்தின் தேவையும் வலிமையும் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே மக்களைத் தேடி மருத்துவம் திட்ட ஊழியர்களின் போராட்டம் டிஎம்எஸ் வளாகத்தில் நடைபெற்ற போது காவல்துறை

வழியிலேயே கைது செய்தது, வீட்டிலேயே கைது செய்தது, அலுவலக வளத்திற்குள் நுழைய விடாமல் தடுத்து நிறுத்தியது என காவல்துறையால் நடத்தப்பட்ட அராஜகமான நடவடிக்கைகள் கண்டனத்துக்குள்ளானது.

சாம்சங் தொழிலாளர் போராட்டம் நடைபெற்ற போது தலைவர்களை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கைது செய்தது தொழிலாளர்களின் வீடுகளுக்கு இரவு நேரத்தில் சென்று கைது செய்தது போராட்ட பந்தலை பிரித்து போராட்டத்தை நடைபெறவிடாமல் தடுத்தது அனைத்து தொழிற்சங்க ஆதரவு ஆர்ப்பாட்டத்தை நடத்த அனுமதி வழங்க மறுத்து கைது செய்தது என காவல்துறையின் அடக்குமுறை நடவடிக்கைகள் தொடர்கிறது.

தொடர்ந்து காவல்துறையால் மேற்கொள்ளப்படும் அடக்குமுறை செயல்பாடுகளை கண்டித்து அறிக்கைகள் வெளியிட்டும் எதிர்ப்புக் குரல்கள் பலமாக ஒலித்தும் எவ்வித மாற்றமும் காவல்துறை நடவடிக்கையில் நிகழாதது பெரும் ஏமாற்றத்தை அளிக்கிறது. காவல்துறையின் இத்தகைய செயல்பாடுகளை கவனிக்காமல் இருப்பதும், ஜனநாயக வழியில் நடைபெறக்கூடிய இயக்கங்களை காவல்துறை பாதுகாப்புடன் நடைபெறுவதை உறுதி செய்யாததும் தமிழ்நாடு அரசின் மீதான எதிர்ப்புணர்வை அதிகப்படுத்தும் என்பதை தமிழ்நாடு அரசு உணர வேண்டும். எனவே நியாயமான போராட்டங்களை காவல்துறை மூலமாக எதிர்கொள்வதை தவிர்த்து நேர்மையான பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாண தமிழ்நாடு அரசு முன்வரவேண்டும்.போராட்டங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை போராட்டங்கள் மூலமாகவே எதிர்கொள்வோம்.

போராட்டங்களே நம் உரிமைகளை பாதுகாக்கும்.. போராட்டங்களே நம் உரிமைகளை பெற்றுத் தரும்.. கோரிக்கைகள் நிறைவேறும் வரை, உரிமைகள் மீட்கப்படும் வரை போராட்டங்கள் தொடரும். ஒன்றுபட்ட இடைவிடாத சமரசமற்ற போராட்டங்களே முன்னேற்றத்தை தரும். எனவே போராட்டங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை போராட்டங்கள் மூலமாகவே எதிர்கொள்வோம். ●

# அக்கா ஓர் வரம்

- N.சுகன்யா



எதிர்காலத்தில்
தன்
தங்கை
எதிர்கொள்ள
நேரிடும் அனைத்தையும்...
அவளுக்கு
முன்
எதிர்கொண்டு,
அவள்
கை பிடித்து
அழைத்துச் செல்லும்
முதல் வழிகாட்டி
அக்கா!

அவள்
அக்காவாக பிறந்ததே
கருவறைக்கூட
தன் தங்கைக்கு
சௌகர்யமானதா என
ஒத்திகை பார்ப்பதற்கே...!!!
அக்காக்கள்
நம்
வாழ்க்கைக்கான வரங்கள். ●

# முத்து நகரில் பறிக்கப்பட்ட உரிமைகளை மீட்டு எடுக்கும் மாநாடு!

நாம் போராடுகிற வரைதான் காலம் நம் கையில் எனவே இது நம் மூச்சுக் காற்றுக்கான போராட்டம். முழு மூச்சோடு களமிறங்க ஸ்தாபனம் எனும் போராயுதத்தை பட்டை தீட்டுவோம். ஆம் இன்று இந்தியாவில், தமிழகத்தில், உலகில் எண்ணற்ற போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அவை, இருக்க இடம், உடுக்க உடை, உண்ண உணவு என்ற கோரிக்கைகளுக்கு மட்டும் அல்லாமல் தன்னுடைய சுய கௌரவத்தையும் தன் மானத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் இன்னும் பிற உரிமைகளுக்காகவும் உலகம் முழுவதும் உழைப்பாளி மக்கள் போராடி வருகிறார்கள். இப் போராட்டங்களின் அரசுகள் அணுகும்விதம் மிகக் கொடூரமானதான உள்ளது மன்னர் ஆட்சி அணுகுமுறைபற்றி சொல்லவே வேண்டியதில்லை.

அரசு இயந்திரம் என்பது சட்டத்தை அமல்படுத்த வேண்டிய அரசமைப்புச் சட்டத்தின் படியான காவல்காரன் ஆகும். ஆனால் ஆட்சி பொறுப்பேற்ற உடனேயே அனைத்தையும் மறந்து தங்களது கடமைகளை மறுக்கிறார்கள் அவர்களை தங்களின் வாக்குரிமையைப் பயன்படுத்தி ஆட்சிப் பொறுப்புக்கு தேர்வு செய்த மக்களும் தவறுகளை தட்டிகேட்க மறந்து போய் நிற்கிறார்கள்.

அதில் அரசு ஊழியர், ஆசிரியர்கள் விதிவிலக்கல்ல ஆள்வோரின் பரபரப்பான அறிவிப்புகளால் ஆட்சியாளர்களின் தவறான நடவடிக்கையால் உழைப்பாளி மக்களாகிய நாம் சந்தித்து வரும் பிரச்சினைகளையும் உண்மை நிலையினையும் எடுத்துச்செல்ல வேண்டியது இன்று நம் முதற்பெரும் கடமையாக மாறியுள்ளது, அதற்கு உ.த. கீழ் கண்டவாறு. இந்தியாவில் மூன்றாவது முறையாக பதவி ஏற்றுள்ள மோடி அவர்கள் தொலைகாட்சி வழியாக டில்லியில் சர்வதேச மாநாட்டில் பேசும்போது இந்தியாவில் லட்சியக் கனவுகள் நனவாகும்வரை ஓய்வு எடுக்க மாட்டேன் என்று பேசியுள்ளார். சுதந்திர இந்தியாவின் லட்சியங்களையும் மாண்புகளையும் அனைத்தையும் தகர்க்கிற வேலையைச் செய்து கொண்டு விடுதலை போராட்டத்தின் விழுமியங்களை பன்மைதன்மை சமத்துவம் ஆகியவற்றை ஆர் எஸ்.எஸ்.என் நோக்கங்களான இந்து ராஷ்டிரம் வருணாசிரமத்தை திணிக்கும் மனு ஸ்மிருதி ஆகியவற்றை கொண்டுவரத் துடித்துக்கொண்டு பேச மோடியால்தான் முடியும் என்று பத்திரிகை செய்திகள் கூறுகின்றன.

அரசியல் சட்டத்தின் முகப்புரையில் இருக்கும் மதச் சார்பின்மை சோசலிசம் ஆகியவற்றை நீக்க வெண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் இந்துத்துவா எண்ணம் கொண்டவர்களை வழக்கு தொடுக்க செய்ததும் அதன் மீது மதச்சார்பின்மைதான் அரசியல் அமைப்பின் கூட்டமைப்பு என்று பொட்டில் அடித்தார்போல் நீதிமன்றம் கூறியிருப்பது நாட்டுக்கு நல்ல காலம்.

எல்லோரும் ஓர் நிறை எல்லோரும் ஓர் விலை என்று மகாகவி பாரதி பாடியதையே அண்ணல் அம்பேத்கர் அரசியல் அமைப்புச் சட்டத்தில் எதிரொலித்தார். ஆனால், சோசலிசம் என்பது நாட்டின் அனைத்து வளங்களும் வாய்ப்புகளும் அனைத்தும் மக்களுக்கும் சமமான முறையில் பங்கிட்டு வழங்கப்பட வேண்டும் என்பதுதான் என்று உச்ச நீதிமன்றம் கூறியிருப்பதற்கு மாறாகத்தானே பிஜேபி கூட்டணி அரசு நடந்து கொண்டிருக்கிறது ஆர்.எஸ்.எஸ்.ன் உபாசரான அதானியை இந்தியாவின் முதல் பெரும் பணக்காரராக ஆக்குவது உலகப் பணக்காரர்களில் முதல் 10 இடத்துக்கு முன்னேறுவது என்றுதானே பணியாற்றிக் கொண்டிருக்கிறது. சமத்துவத்தை நோக்கிய எந்த முன்னெடுப்பும் இந்துத்துவ கூட்டத்துக்கு எட்டி காயாக கசக்கவே

செய்கிறது. அதனால், தான் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றவும் அதற்கு ஏற்றார் போல் ஒரே நாடு ஒரே தேர்தல் என்று கூறி ஜனாதிபதி ஆட்சி முறைக்கு வழி ஏற்படுத்தவும் முனைகிறது இந்த நிலையில் தான் மோடி அவர்கள் இந்தியாவின் கனவுகள் நனவாகும் வரை ஓயமாட்டேன் என்று பேசி அனைவரையும் அசத்தியுள்ளார்.

இந்துத்துவாவின் கனவுகளும் இந்தியாவின் கனவுகளும் ஒன்றுக்கொன்று எதிரானவை அதனால்தான் கடந்த தேர்தலில் பிஜேபியின் தனி பெரும்பான்மையை பறித்து மக்கள் வாக்களித்தனர் உலகின் பிரசித்தி பெற்ற வாசகமான நான் ஒரு கனவு காண்கின்றேன் என்று மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் போல மோடி அவர்கள் பேசியிருக்கிறார் ஆனால் அவரது கனவு சமத்துவ கனவு இவரது கனவோ அதற்கு எதிரானது ஜாதி பேதம் கூறி மேல் கீழ் என வர்ணமும் வர்க்கமும் ஆக இந்திய சமூகத்தைக் கூறுபோடும் உங்களது கனவு நிறைவேறாது ஆனால் உங்களை மக்கள் ஓய்வெடுக்க வைப்பது உறுதியாகிவிட்டது.

**இந்திய பொருளாதாரம் வீழ்ச்சி**

டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ரூபாய் 84.7 ஆக வரலாறு காணாத வகையில் வீழ்ச்சி அடைந்திருக்கிறது இது ஒன்றிய மோடி ஆட்சியில் இந்திய பொருளாதாரம் எந்த திசையை நோக்கி செல்கிறது என்பதற்கு சாட்சியாகவும் இருக்கிறது.

2024-25 நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் ஜிடிபி வளர்ச்சி விகிதம் 7% சதவீதமாக இருக்கிறது. இது விரைவில் 8% சதவீதத்தை தொடும் என இந்தியா ரிசர்வ் வங்கி கூறுகிறது இது உண்மை எனில் ஏன் டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி அடைந்தது, அதல பாதாளத்திற்கு செல்கிறது. இந்திய ரிசர்வ் வங்கி நாட்டின் உண்மையான பொருளாதார தரவுகளின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறதா என்ற கேள்வி எழுகிறது.

ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி அடையும்போது அது பொருளாதாரத்தில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதுதான் எதார்த்தம் குறிப்பாக மருந்துகள், தங்கம், பிளாஸ்டிக் பொருட்கள், ரசாயனங்கள், எலக்ட்ரானிக் பொருட்கள், பெட்ரோல், டீசல், அத்தியாவசிய பொருட்கள் ஆகியவை ரூபாய் மதிப்புடன் நேரடி தொடர்புடையவை எவ்வளவுக்கு எவ்வளவு ரூபாயில் மதிப்பு வீழ்ச்சிஅடைகிறதோ அதே வேகத்தில் பொருட்கள் விலையும் பன்மடங்கு உயரும். காரணம் இந்தியாவில் ஏற்றுமதி செய்வதை விட இறக்குமதியின் அளவு அதிகமாக இருக்கிறது. அதாவது வர்த்தக பற்றாக்குறை உருவாகி ஒரு லட்சத்து 76 ஆயிரம் கோடியாக (20.78)பில்லியன் டாலர் இருக்கிறது மறுபுறம் வழக்கத்திற்கு மாறாக இந்த மாதத்தில் மட்டும் 10 பில்லியன் அமெரிக்க டாலர் முதலீடுகள் இந்திய சந்தையில் இருந்து வெளியேறி இருக்கிறது. அதாவது வழக்கமாக அக்டோபர் மாதம் பண்டிகை காலம் என்பதால் வர்த்தகம் அதிகரிக்கும், முதலீடுகளும் அதிகரிக்கும். ஆனால் தற்போது, இருக்கும் முதலீடும் வெளியேறி இருக்கிறது.

இந்த லட்சணத்தில் எப்படி ஜிடிபி வளர்ச்சி 8% சதவீதத்தை எட்ட முடியும்? பொதுவாக சர்வதேச அளவில் போர் அல்லது மிகப்பெரிய இடர்பாடு ஏற்பட்டால், கச்சா எண்ணெய் விலை அதிகரிக்கும். ஆனால் உக்ரைன், ரஷ்யா, லெபனான் இஸ்ரேல் மோதல் பின்னணியில் ஒபேக் பிளஸ் நாடுகள் உற்பத்தியை குறைத்து செயற்கையாக பற்றாக்குறையை உருவாக்கிய போதும், கச்சா எண்ணெய் விலை பெரிய அளவில் உயரவில்லை கடந்த ஆண்டு ஏப்ரலில் ஒரு பேரல் கச்சா எண்ணெய் 89 டாலராக இருந்தது. ஆனால், இந்த அக்டோபரில் அது 76 டாலராக இருக்கிறது. அப்படி இருந்தும், டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு ஏன் கடும் வீழ்ச்சி அடைய வேண்டும்? உண்மையில் இந்திய பொருளாதாரம் மிகவும் இக்கட்டான நிலையில் இருக்கிறது என்பதுதான் எச்சரிக்கையே. ரூபாயின் மதிப்பின் வீழ்ச்சி அதனை மறைக்க மீண்டும் வட்டி விகிதத்தை உயர்த்துவது பொருட்களின் விலை உயர்த்துவது என மக்களின் தலையில் தான் மேலும் சுமை ஏற்றப்படும். கூடிய விரைவில் வளர்ச்சி என்ற முகமூடி கிழிந்து உண்மை வெளிவரும். தற்போது பொருட்களை வாங்கும் சக்தியை மக்கள் இழந்துள்ளார்கள்.

**வேலை உறுதித் திட்டத்தை நீர்த்துப்போக செய்யும் முயற்சி**

கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், இன்று பெரும் நெருக்கடியை சந்தித்துள்ளது. ஒன்றிய அரசின் பிஜேபி ஆட்சியில் வேண்டுமென்றே செய்யப்படும் அலட்சியமும் முறைகேடான நடைமுறைகளும் இத்திட்டத்தை படுகொலை செய்து வருகின்றன.

வெறும் ஆறு மாதங்களில் 84.8 லட்சம் ஏழை உழைப்பாளிகள் பட்டியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர் இது ஓர் எண்ணிக்கை மட்டுமல்ல, ஒவ்வொரு எண்ணுக்கு பின்னாலும் ஒரு குடும்பத்தின் வாழ்வாதாரம் சிதைக்கப்பட்டுள்ளது. பெருந்தொற்றின் போது உயிர்நாடியாக இருந்த இத்திட்டத்தை இன்று தொழில்நுட்ப நுணுக்கங்களின் பெயரால் சீரழித்துக் கொண்டிருக்கிறது பிஜேபிஒன்றிய அரசு. ஆதார் அடிப்படையிலான பண பரிமாற்ற முறையை, (ABPS)திணித்து, அதன் மூலம் தொழிலாளர்களை விரட்டியடிக்கும் தந்திரம் அரங்கேருகிறது. கிராமப்புற வங்கி சேவைகள் முழுமையாக இல்லாத நிலையில் இணையதள இணைப்புகள் சரியாக இல்லாத சூழலில் இந்த டிஜிட்டல் கட்டாயம் ஏழைகளின் வயிற்றில் அடிக்கிறது.

தமிழ்நாட்டில் 14.7 சதவீதமும் சத்தீஸ்கரில் 14.6 சதவீதமும் தொழிலாளர்கள் நீக்கப்பட்டுள்ளனர் லிப்டெக் நிறுவனத்தின் ஆய்வு தெரிவிப்பது போல் 15 சதவீதம் நீக்கங்கள் முற்றிலும் முறைகேடானவை முறையான விசாரணை இன்றி தொழிலாளர்களின் குறைகளை கேட்காமல் மேற்கொள்ளப்படும் இந்த நீக்கம் ஜனநாயக விரோதமானது.

பண வீக்கம் உச்சத்தில் இருக்கும் வேளையில், வேலையின்மை அதிகரித்துள்ள நிலையில் இந்த குறைப்பு பெரும் சமூக அவலத்தை உருவாக்கியுள்ளது கிராமப்புற மக்கள் வேலை தேடி நகரங்களை நோக்கி புலம் பெயர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

மோடி ஆட்சியின் கார்ப்பரேட் ஆதரவு கொள்கைகளின் விளைவு இது பெரும் முதலாளிகளுக்கு லட்சக்கணக்கில் கோடிக்கணக்கில் தள்ளுபடி செய்யும் அரசு ஏழை மக்களின் வாழ்வாதாரத் திட்டத்தில் மட்டும் சிக்கனம் காட்டுகிறது உழைக்கும் மக்களை வஞ்சிக்கும் இந்த அணுகுமுறை மாற வேண்டும். (கடந்த பத்தாண்டுகளில் கார்ப்பரேட்டுகளுக்கு வரிச் சலுகை 17.46 லட்சம் கோடி)

ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை மேலும் வலுப்படுத்திட வேண்டும் வேலை நாட்களை 200 ஆக உயர்த்த வேண்டும் ஊதியத்தை உயர்த்த வேண்டும் டிஜிட்டல் கட்டாயத்தை கைவிட வேண்டும் கிராமப்புற பொருளாதாரத்தை பாதுகாக்க வேண்டுமெனில் எனில் இத்திட்டத்தை பலப்படுத்துவதே வழி ஆனால் ஒன்றிய பிஜேபி ஆட்சி இதற்கு நேர் மாறாக செயல்படுகிறது மக்கள் நலனை காக்க இத்தகைய மக்கள் விரோத போக்குக்கு எதிராக நாம் அனைவரும் குரல் கொடுக்க வேண்டிய அவசியமாய் இருக்கிறது.

**ஓய்வு பெற்ற ஊழியர்கள் வேலைக்கு அமர்த்துவது**

பணி ஓய்வு பெற்ற ரயில்வேத்துறை ஊழியர்களை ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் பணியில் அமர்த்துவது என்ற முடிவு எந்த வகையிலும் ஏற்றத்தக்கது அல்ல ரயில்வே வாரியத்தின் இந்த உத்தரவை திரும்ப பெற வேண்டுமென்று டி ஆர் இ யூ உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்கங்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்தியாவில் 45 ஆண்டுகள் இல்லாத வேலையின்மை உச்சத்தில் உள்ளது உலகின் மிகப்பெரிய பொதுத்துறை நிறுவனங்களில் ஒன்றான இந்திய ரயில்வே துறையை தனியார் மயமாக்க ஒன்றிய பாஜக கூட்டணி அரசு கட்டம் கட்டமாக காய் நகர்த்தி வருகிறது.

2022 ஆம் ஆண்டு இந்திய ரயில்வேயில் 2,50,000 காலிப் பணியிடங்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டது. அது கடந்த இரண்டு ஆண்டுகளில் மேலும் அதிகரித்திருக்கக் கூடும் ஆனால் இந்த காலிப் பணியிடங்களை நிரப்பாதது மட்டுமின்றி, அந்த எண்ணிக்கையை குறைத்து காட்டும் முயற்சியிலும் ரயில்வே துறை ஈடுபட்டுள்ளது.

1999 2000 ஆம் ஆண்டில் இந்திய ரயில்வே துறையில் 16 லட்சம் பணியாளர்கள் இருந்துள்ளனர் இந்த எண்ணிக்கை படிப்படியாக குறைக்கப்பட்டு கொண்டே வருகிறது இந்த நிலையில் குறைவான எண்ணிக்கையில் காட்டப்படும் காலி பணியிடங்களில் கூட, இளைஞர்களுக்கு வாய்ப்பு தராமல் ஓய்வு பெற்ற ஊழியர்களை ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் மறு நியமனம் செய்வது என்பது வேலை வாய்ப்புக்காக ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கும் லட்சக்கணக்கான இந்திய இளைஞர்களுக்கு இழைக்கப்படும் துரோகமாகும்.

வேலைவாய்ப்பு மறுக்கப்படுகிறது என்பது மட்டுமல்ல, ஏற்கனவே பணியில் உள்ள ஊழியர்களின் பதவி உயர்வு மறுக்கப்படுவதோடு பாதுகாப்பு குறைபாடுகளும் ஏற்பட வாய்ப்புண்டு ரயில் பயணிகளின் பாதுகாப்பில் அலட்சியம் காட்டும் ஒன்றிய அரசு விபத்துக்கள் நடக்கும் போது தனிமனித தவறுகள் என்று எடுத்த உடனேயே கைகாட்டி விடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளது. பணி ஓய்வு பெற்ற ஊழியர்களை மறுபடி நியமனம் செய்யும் போது, விபத்துகளுக்கு இதையே ஒரு காரணமாக காட்டவும் ஆட்சியாளர்கள் தயங்க மாட்டார்கள்.

ஓய்வு பெற்ற ஊழியர்களை மறு நியமனம் செய்ய வேண்டிய அவசியம் என்ன? தகுதியான பொருத்தமான இளைஞர்கள் இல்லை என்று சொல்ல முடியுமா? 100 காலி பணியிடங்களுக்கு விண்ணப்பம் கோரினால் லட்சக்கணக்கில் விண்ணப்பங்கள் வரும் அளவுக்கு வேலையின்மையின் அடர்த்தி அதிகரித்துள்ளது தங்களுடைய கல்விக்கு பொருத்தமில்லாத பணிகளில் கூட சேர்வதற்கு இளைஞர்கள் தயங்குவதில்லை.

இந்திய நாட்டின் திருக்கோவில்கள் என்று வர்ணிக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயம் ஆக்குவதை கைவிட வேண்டும் ஒன்றிய அரசு பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள காலிப் பணியிடங்களை வேலை வாய்ப்புக்காக காத்திருக்கும் இளைஞர்களை கொண்டு நிரப்ப வேண்டும். வேலையின்மை என்பது தனிப்பட்ட பிரச்சனை அல்ல, அது ஒட்டுமொத்த தேசத்தின் பிரச்சனை.

**சாம்சங் இந்திய தொழிலாளர்களின் உறுதிமிக்க போராட்டம்**

காஞ்சிபுரத்தில் உள்ள சாம்சங் இந்திய நிறுவனத்தில் பணிபுரிந்து வந்த இளம் தொழிலாளர்களின் உறுதிமிக்க போராட்டம் தேசத்தை திரும்பி பார்க்க வைத்திருக்கிறது அனைத்து முனைகளில் இருந்து வந்த நெருக்கடிகளையும் எதிர்கொண்டு உருக்கு போன்று உறுதியுடன் நின்ற தொழிலாளி வர்க்கத்திற்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சங்கம் அமைக்கும் உரிமை என்பது அரசியல் சாசனம் வழங்கியிருக்கும் அடிப்படை உரிமை. அதனை யாரிடமும் யாசகமாக கேட்டு பெற வேண்டியதில்லை இன்று நாம் அனுபவிக்கிற எட்டு மணி நேர வேலை, விடுப்பு, சிறப்பு பயன்கள் அனைத்தும் தொழிலாளி வர்க்கம் ரத்தம் சிந்தி பெற்றவை அதனை ஒருபோதும் விட்டுக்கொடுக்க முடியாது என்பதை இந்திய சாம்சங் தொழிலாளர்கள் தங்கள் போராட்டத்தின் மூலம் மீண்டும் நிருபித்திருக்கின்றனர்.

நவீன தாராளமயக் கொள்கை அமலாக்கம் உலகம் முழுவதும் புதிய வகையிலான சுரண்டல்களை உருவாக்கி வருகிறது. குறிப்பாக கார்ப்பரேட் நிறுவனங்களின் மூலதனமே கொள்ளை லாபம் என்ற ஒற்றை இலக்கோடு வேட்டையாடி வருகிறது. இத்தகைய சுரண்டலும் ஒடுக்கு முறையும் தொழிலாளர்களின் எழுச்சியை பன்மடமாக்கும் என்பதுதான் வரலாறு. அதுதான் சாம்சங் இந்திய நிறுவனத்திலும் நடந்திருக்கிறது.

சாம்சங் தொழிலாளர் போராட்டத்தை யொட்டி, தொழிற்சங்கம் வந்தால், முதலீடுகள் வராது; தொழில் வளர்ச்சி இருக்காது; தொழிலாளர்களுக்கு வேலை இருக்காது என எப்போதும் போல் வடிகட்டிய பொய்யை இறக்கினார்கள். ஆனால் கடந்த 25 ஆண்டுகளில் தொழிற்சங்க போராட்டத்தால் மூடிய ஒரு தொழிற்சாலையைக் கூட காட்ட முடியவில்லை புயலென வந்த பொய்கள் அதே வேகத்தில் மறைந்து விட்டன. ஆனால் தொழிலாளர்களின் ஒற்றுமையும் உறுதியும், உண்மை என்ன என்பதும் களத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

கடந்தாண்டு பன்னிரண்டு மணி நேர வேலை சட்டம் சட்டமன்றத்தில் தமிழக அரசால் முன்மொழியப்பட்ட போது இப்படி ஒரு சட்டம் இல்லை என்றால் முதலீடுகளை ஈர்க்க முடியாது என்கின்ற வாதம் முன்வைக்கப்பட்டது ஆனால் ஒட்டுமொத்த தொழிலாளி வர்க்கமும் இடதுசாரிகளும் எதிர்வினை ஆற்றியதின் காரணமாக, அந்தச் சட்டத்தை கைவிட்ட பின்பும் தமிழகத்திற்கு முதலீடு வந்து கொண்டிருக்கிறது என்பது கவனிக்கத்தக்கது. தொழிலாளர்கள் உரிமைக்கு நெருக்கடி வரும் போதெல்லாம் தமிழகத்தின் தொழிலாளி வர்க்கம் ஒன்றிணைந்து அதனை மீட்டிருக்கிறது என்பதுதான் கடந்த கால வரலாறு தமிழகத்தில் தொழில் வளர்ச்சி பெருகும் போது அதோடு இணைந்து தொழிலாளர்கள் உரிமைகளும் நிலைநாட்டப்பட்டு இருக்கிறது என்பதுதான் தமிழகத்தின் பெருமை. அந்த பெருமை தொடரட்டும்.

**ஒரு சில உதாரணங்கள் கீழ்கண்டவாறு**

சாம்சங் நிறுவனம், இந்த வேலை நிறுத்தத்தில் சுமார் 800 கோடி இழப்பு ஏற்பட்டதாக சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தது. அதற்கு தி இந்து நாளிதழ் ஒரு ஆய்வு மேற்கொண்டது. தமிழ்நாட்டில் அதிக அளவில் தொழிலாளர் போராட்டங்கள் நடந்துள்ளன. இந்தியாவில் நடந்த மொத்த வேலை நிறுத்தங்களில் 36 சதவீதம் தமிழகத்தில் நடந்துள்ளது. இது மற்ற மாநிலங்களை விட அதிகம். இந்தியாவில் மொத்த தொழிற்சாலைகளில் 16 சதவீதம் தமிழகத்தில் உள்ளது. 2008இல் 14 சதவீதமக இருந்த இந்த எண்ணிக்கை 2018இல் 16 சதவீதம்ஆக உயர்ந்துள்ளது.

தொழிலாளர்களின் எண்ணிக்கையிலும் தமிழகம் முன்னிலையில் உள்ளது. போராட்டங்களால் ஏற்பட்ட உற்பத்தி இழப்பில் குஜராத் இந்தியாவில் முதல் இடத்தில் உள்ளது 24 சதவீதம் தமிழகத்தில் போராட்டம் அதிகமாக இருந்தாலும் தொழில் வளர்ச்சி தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

சாம்சங் போராட்டத்தில் தமிழக அரசின் காவல்துறை சாம்சங் அடியாளாக மாறியது என்று பத்திரிக்கை செய்திகள் கூறுகின்றன.

தொடர்ச்சியான 32 நாட்கள் போராட்டத்திற்கு பிறகு தான் மாண்புமிகுமுதலமைச்சர் உத்தரவின் பேரில் நான்கு அமைச்சர்கள் பேச்சுவார்த்தை நடத்தி, கோரிக்கை நிறைவேற்றப்பட்டது. ஒன்றிய அரசு பல்வேறு மக்கள் விரோத, ஊழியர் விரோத கொள்கைகளை கடைபிடிக்கக் கூடிய இந்த காலகட்டத்தில், அதேபோல் தான் தமிழக அரசு ஆட்சி கட்டிலில் அமர்ந்து 42 மாதங்கள் ஆன நிலையில் பல்வேறு விதமான மக்கள் நலத்திட்டங்களை நாள்தோறும் அறிவித்து வருகிறது அவற்றின் அமலாக்கம் குறித்து அது கவலைப்படுவதில்லை.

அரசின் அறிவிப்புக்கு பின்னால் ஒரு சில மக்கள் நலத் திட்டங்கள் இருந்தாலும் அதிலுள்ள சில அவலங்கள் மக்கள் கண்களுக்கு தெரிவதில்லை. மத்திய அரசின் பல்வேறு கொள்கைகளை தமிழகத்தில் அரசு எதிர்த்தாலும் ஒரு சில விஷயங்களில் தமிழக அரசும் ஒன்றிய அரசு போல் அப்படியே அமலாக்கி வருகிறது குறிப்பாக அரசுத் துறைகளை தனியார் மயமாக்கும் கொள்கைகளால் அரசு ஊழியர்களும் பொதுமக்களும் ஏராளமான பிரச்சனைகளை சந்தித்து வருகிறார்கள்.

கடந்த கால போராட்டங்களை இந்த அரசுக்கு நினைவு படுத்த வேண்டிய நிலை உள்ளது அதாவது 10.2.1988 தொடங்கிய நமது போராட்டம் அதனை தொடர்ந்து நடைபெற்ற வீரம் செரிந்த போராட்டமும் மத்திய அரசுக்கு இணையான ஊதிய மாற்றத்தையும் போனசையும் பெற்று தந்தது போராடினால் எதையும் பெற முடியும் என்பதை உணர வைத்த போராட்டம் அந்த போராட்டம். ஆட்சியாளர்களின் புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக, அரசு ஊழியர் ஆசிரியரின் உரிமைகள் பறிக்கப்பட்டது. அப்போது இருந்த அரசின் கொள்கை முடிவு நம்மையும் விட்டு வைக்கவில்லை. போனஸ் சரண்டர் விடுப்பு ஓய்வூதிய பலன்கள் பறிக்கப்பட்டன. உரிமைகளை மீட்டெடுக்க அரசு ஊழியர்கள் ஓய்வூதியர்கள் 2003 இல் நடத்திய வீரஞ்செறிந்த வேலை நிறுத்த போராட்டம் தான் அரசின் அடக்கு முறையிலிருந்து நம்மை மீட்டெடுத்தது நாம் நடத்திய இந்த வேலை நிறுத்தம்

நமது உரிமை மீட்புக்கு ஆயுதமாக இருந்தது பொதுமக்களையும் மற்றும் பலதரப்பு சமூகத் துணையும் ஈர்த்த இந்த போராட்டம்.

ஆனால் ஆட்சியாளர்கள் தங்களது கொள்கையை மாற்றிக் கொள்ளவில்லை தொடர்ந்து மக்கள் விரோத நடவடிக்கையும் தொழிலாளர்கள் விரோத நடவடிக்கையும் தொடர்ந்து நிலையில் வரும் புதிய பென்ஷனும் சிறப்பு காலமுறை ஊதிய அவலமும் தொடர்கிறது. மீண்டும் ஒருங்கிணைந்த போராட்டம் சாத்தியமில்லாத நிலையில் அடக்கு முறையை சந்தித்து அதே அரசிடம் 2016 ஆம் ஆண்டு தன்னந்தனியாக நாம் நடத்திய காலவரையற்ற வேலை நிறுத்தம், மறியல் காத்திருப்பு போராட்டம் போன்றவை முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதாவை சட்டமன்றத்தில் 110 விதியின் கீழ் 13 அறிவிப்புகள் வெளியிட வைத்தது அரசு ஊழியர்களுக்கு உற்சாகம் அளித்தது இந்தப் போராட்டம்.

ஆனால் கடந்த ஆட்சியில் போராடி ஒரு சில கோரிக்கைகளை பெற்றிருந்தாலும் நாம் எதிர்பார்த்தது சமூக பாதுகாப்புடன் கூடிய பழைய பென்ஷன். சரண்டர் சிறப்பு கால முறை ஊதியம், தமிழகத்தில் 6 லட்சம் காலிப்பணியிடம் நிரப்புதல் 21 மாதம் நிலுவை ஊதியம் தொகுப்பூதிய மதிப்பூதியம் அவுட் சோர்சிங் ஒப்பந்த முறை நியமன முறையை கைவிட வேண்டும் உள்ளிட்ட நிலுவை கோரிக்கைகள் தொடர்ந்து தீர்க்கப்படாத அவலம் திமுக அரசிலும் நீடித்துக் கொண்டிருக்கிறது. புதிய அரசு, குறிப்பாக கழக அரசு வந்தவுடன் அரசு ஊழியர் ஆசிரியர் கோரிக்கை அனைத்தும் தீர்க்கப்படும் என்று மாநாடுகளிலும் நேரடியாக சந்தித்தபோதும் வாக்குறுதி அளித்தார் மாண்புமிகு முதலமைச்சர் அது மட்டுமல்ல திமுக தேர்தல் வாக்குறுதியாகவும் தந்த தமிழக முதல்வர், ஆட்சிக்கு வந்து நான்கு ஆண்டுகள் நெருங்கக் கூடிய நிலையில் பலமுறை பேச்சுவார்த்தை நடத்தியும் அமைச்சர் பெருமக்களுடன் இரண்டு முறை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டும் எந்த விதமான கோரிக்கைகளும் தீர்க்கப்படாமல் இருப்பதோடு, அரசு துறைகளில் இனிமேல் நிரந்தர ஊழியர்கள் இல்லை, ஓய்வூதியம் பற்றிய சமூக நீதிக்கு எதிரான அரசாணைகள் என பல்வேறு அரசாணைகள் போடப்பட்டு, அத்த கூலி முறை போன்றவை தொடர்ந்து கடைபிடிக்கும் இந்த அரசை எதிர்த்து மீண்டும் ஒரு போராட்டத்தை, ஒரு வலுவான போராட்டத்தை நடத்த வேண்டிய கட்டாயம் இன்றைய காலகட்டத்தில் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் அரசியல் சூழ்நிலை ஒரு பக்கமும், அரசின் மௌனம் மறுபக்கமும் தொடர்கிறது.

தமிழக அரசின் தேர்தல் கால வாக்குறுதிகள் பிரதானமான கோரிக்கையான புதிய பென்ஷன் ரத்து செய்து பழைய பென்ஷன் அமல்படுத்தப்படும் என்று முன்வைக்கப்பட்டது. இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் புதிய பென்ஷன் ரத்து செய்து பழைய பென்ஷன் அமல்படுத்தப்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் தமிழக அரசு மவுனம் காத்து வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் கவனத்திற்கு அசாம் மாநில அரசு மற்றும் பலர் கொடுத்த வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் ஒரு தீர்ப்பை இங்கு நினைவு படுத்த வேண்டிய கட்டாயம் இருக்கிறது. ஒரு நல்ல ஆட்சி அரசாங்கம் அதன் ஊழியர்களை எப்படி நடத்த வேண்டும் என்று கூறியுள்ளது கவனிக்கத்தக்கது.

மாநில அரசின் பங்கு என்பது ஊழியர்களை பொருத்தமட்டில் ஒரு முன்மாதிரி முதலாளியாக இருக்க வேண்டும். எதிர்காலத்தில், ஊழியர்களின் உரிமை கோரிக்கைகளின் பேரில் சினம் கொள்ளாமல் அது இருக்கும் என்ற எதிர்பார்ப்பையும், பொறுப்பில்லாத இல்லாத அலட்சியப் போக்குடன் விலகி நின்று வேடிக்கை பார்க்காது என்ற நம்பிக்கையையும், ஊழியர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை அது எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும் அவர்களின் நம்பிக்கை நீர்த்துப்போகும் சூழ்நிலையை அரசு ஏற்படுத்தக் கூடாது. ஒவ்வொரு ஊழியரின் நம்பிக்கையும், மதிப்பும் மகிமை வாய்ந்தது அதை முன்மாதிரி முதலாளியாக இருக்கும் அரசு ஏமாற்றமாகவோ, துரோகமாகவோ மாற்றி அவர்கள் பணியேற்றத்தில் சதுரங்க விளையாட்டு ஆடக்கூடாது அமைதி உணர்வும்

சிரத்தையான நேர்மையும் ஒவ்வொரு நிகழ்விலும் எதிரொலிக்க வேண்டும். நம்பகமான சூழல் நிலவ வேண்டும் ஊழியர்கள் அனைவரும் தாங்கள் கண்ணியத்துடனும் நேர்மையாகவும் நடத்தப்படுகிறோம் என்றும் தங்கள் நம்பிக்கைக்கு பங்கம் ஏற்படாது என்றும் நிச்சயமாக நம்ப வேண்டும். அப்போதுதான் நல்லாட்சி என்ற கருத்து படிமம் உறுதிப்படும்.

அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் அனைவரும் இந்த அரசை மேற்கூறப்பட்ட தீர்ப்பின் அடிப்படையிலேயே நம்பியிருந்தோம். ஆனால் அரசு ஊழியர்களின், ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை வெளிப்படை தன்மை உடன் பரிசீலித்து அவர்களின் கோரிக்கைகளை மொத்தமாக இல்லாவிடினும் கூடுமான அளவில் முக்கியமான கோரிக்கைகளை நிறைவேற்றும் சூழல் ஏற்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் அப்படி தமிழக அரசு செய்யாமல் போராடுகின்ற அரசு ஊழியர் ஆசிரியர்களை கடும் அடக்குமுறையால் போராட்டத்தை முடக்க நினைக்கிறது. அரசு ஊழியர் ஆசிரியர் கோரிக்கையை தீர்க்கப்படும்போது அரசு நிர்வாகமும் மக்கள் நலத்திட்ட பணிகளும் தொய்வின்றி நடக்கும். சமூகத்தில் வளமும், நலமும் கொழிக்கும்.

இந்நிலையில் தான் முத்துநகர் என்று சொல்லக்கூடிய தூத்துக்குடி மாநகரில், மிக பிரம்மாண்டமான முறையில் 15 ஆம் மாநில மாநாடு நடைபெற்றள்ளது. அதில் புதிய பென்ஷன் ரத்து, சிறப்பு கால முறை ஊதியம் தொகுப்பு ஊதியம் மற்றும் சரண்டர், காலி பணியிடம் நிரப்புதல், கருணை அடிப்படை நியமனம் 25% உயர்த்துதல், 21 மாதம் நிலுவை ஊதியம். அனைத்து துறைகளிலும் ஒப்பந்த முறை நியமனங்களை ரத்து செய்ய வேண்டும் உள்ளிட்ட நிலுவை கோரிக்கைகளை வலியுறுத்தி ஒரு வலுவான இயக்கத்திற்கு திட்டமிட உள்ளோம். அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட மாநாடுகள் மிகச் சிறப்பான முறையில் கம்பீரத்தோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாநாடுகளை 16.11.2024க்குள் முடித்து 2024 டிசம்பர் 14ஆம் தேதி நடைபெறும் பேரணி பொது மாநாட்டில் லட்சக்கணக்கான ஊழியர்களை பங்கேற்க செய்யும் வகையில் அணிதிரட்ட வேண்டிய அளப்பரிய பணி செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மத்திய மாநில அரசுகள் பண்பாடு கலாச்சாரம் உள்ளிட்ட உரிமைகளை தகர்ப்பதில் காட்டும் முனைப்பை, தொழிலாளர் நலன் குறித்து காட்டுவதகாகவோ கவலைப்படுவதாகவோ தெரியவில்லை சட்டமன்ற கூட்டத்திலும் தொடர்ந்து பரிசீலிப்பதாக கூறப்பட்டதை தவிர இதுவரை இல்லாத நிகழ்வாக அரசு ஊழியர் ஆசிரியர் நலன் தொடர்பாக எந்த விதமான அறிவிப்பும் இல்லை என்பது மிகுந்தம் ஏமாற்றம் அளிக்கிறது.

ஆளும் அரசுகள் நாம் போராடிப் பெற்ற உரிமைகளை நமது கரங்களில் இருந்து பறித்துக் கொள்ளும் நிலைக்குத்தான் மீண்டும் மீண்டும் தள்ளப்பட்டுள்ளோம் போராட்டம் மட்டுமே தான் நமக்கான தீர்வு என்று ஆகிவிட்ட நிலையில், பறிக்கப்பட்ட உரிமைகள் அனைத்திற்கும் போராட்டம் என்ற பேராயுதம் தான் விடையளிக்கும் என்ற உறுதியோடு நாம் நம் பயணத்தை தொடர்வோம்.

போராட்டங்கள் எவ்வளவு அவசியமானவை வலிமையானவை என்பதை 62 ஆண்டுகால அரசு ஊழியர் ஆசிரியர் நெடுந் துயர் நமக்கு உணர்த்தியிருக்கிறது. கடந்த போராட்ட வரலாற்றை அரசு ஊழியர ஒவ்வொருவருக்கும் அறியச் செய்ய வேண்டியது நமது அனைவரின் கடமையாகும் அப்போதுதான் போராட்டங்கள் போர் குணத்தோடு நடக்கும் நம் கேட்கும் உரிமைகள் கிடைக்கும்.

ஓடினால்தான் நதி
வீசினால் தான் காற்று
பாடினால்தான் இசை
போராடினால் தான் அரசு ஊழியர்

என்பதை நினைவில் நிறுத்தி 2024 டிசம்பர் 13, 14 இல் தூத்துக்குடியில் நடைபெறும் 15 ஆம் மாநில மாநாட்டில் கலந்து கொண்டு மாநில பிரதிநிதித்துவப் பேரவை எடுக்கும் போராட்ட அறைகூவலை பேரலைகளாக மாற்றுவோம் பறிக்கப்பட்ட உரிமைகளை மீட்டெடுப்போம் வாருங்கள் தோழர்களே.. ●

## மாநில பிரதிநிதித்துவப் பேரவை அறிவிப்பு

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவப் பேரவை (15ஆம் மாநில மாநாடு) **டிசம்பர்** மாதம் 13, 14 தேதிகளில் மாணிக்கம் மகால் (தோழர் நா.முனியாண்டிசாமி அரங்கம்) **தூத்துக்குடி** என்ற முகவரியில் நடைபெற உள்ளது.

பொருள்

13.12.2024 - பொதுச் செயலாளர் அறிக்கை - வேலை அறிக்கை - நிதிநிலை அறிக்கை - விவாதம்.

14.11.2024 விவாதங்களுக்கு பதிலுரை, தீர்மானங்கள் மற்றும் 2025-2027ஆம் ஆண்டுகளுக்கான மாநில நிர்வாகிகள் தேர்தல்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில பிரதிநிதித்துவப் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**(ஆ. செல்வம்)**

பொதுச் செயலாளர்

பெறுநர் :

மாநில பிரதிநிதித்துவப் பேரவை உறுப்பினர்கள்

## மாநில நிர்வாகிகள் தேர்தல் அறிவிப்பு

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் (15ஆம் மாநில மாநாடு) மாநில பிரதிநிதித்துவப் பேரவை 2024 **டிசம்பர்** மாதம் 13, 14 தேதிகளில் மாணிக்கம் மகால் (தோழர் நா.முனியாண்டிசாமி அரங்கம்) **தூத்துக்குடி** என்ற முகவரியில் நடைபெற உள்ளது.

2025-2027ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கீழ்க்கண்ட மாநில நிர்வாகிகள் பதவிகளுக்கான தேர்தல் 14.12.2024 அன்று **தூத்துக்குடியில்** 15ஆம் மாநாட்டு அரங்கில் நடைபெறும்.

| பதவியின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|
| தலைவர் | 1 |
| துணைத் தலைவர்கள் | 6 |
| பொதுச் செயலாளர் | 1 |
| துணை பொதுச் செயலாளர்கள் | 4 |
| மாநிலச் செயலாளர்கள் | 6 |
| பொருளாளர் | 1 |

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்குப் போட்டியிட தகுதியுடையவர்கள் 2024ஆம் ஆண்டு சங்க உறுப்பினராக இருத்தல் வேண்டும். மாநில நிர்வாகியாக போட்டியிடுபவருக்கு தேர்தல் நடைபெறும் நாளில் 3 ஆண்டுகளுக்கு குறையாமல் அரசுப் பணியில் இருக்கக்கூடியவர்கள் மட்டுமே போட்டியிடலாம். ஒருவர் ஒரு பதவிக்கு மட்டுமே போட்டியிடலாம்.

வாக்களிக்கத் தகுதியுடையவர்கள்

தேர்வு செய்யப்பட்ட மாநில பிரதிநிதித்துவப் பேரவை உறுப்பினர்கள். போட்டி இருப்பின் மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் தேர்தல் ஆணையர் ஒருவரை நியமித்து தேர்தல் நடத்தப்படும்.

தோழமையுடன்

**(ஆ. செல்வம்)**

பொதுச் செயலாளர்

கட்டுரை

# விலைவாசி உயர்வை ஈடுசெய்கின்றதா! அகவிலைப்படி உயர்வு ?

**- மு.பாஸ்கரன்**

ஊதியக்குழு பரிந்துரைப்படி விலைவாசி உயர்வுக்கு ஏற்ப ஆண்டிற்கு இரண்டு முறை, அதாவது ஜனவரி முதல் தேதி (ம) ஜீலை மாதம் முதல் தேதி யென விலைவாசி புள்ளிகளின் கணக்கீட்டினை அடிப்படையாகக் கொண்டு விலைவாசி உயர்வை ஈடுகட்ட அரசு ஊழியர்களுக்கு, ஆசிரியர்களுக்கு மத்திய அரசு அகவிலைப்படி உயர்த்தி வழங்கி வரும் நடைமுறை நாம் அறிந்ததே. கடந்த ஆண்டு

ஜீலை 23 முதல் 4% அகவிலைப்படியும் உயர்த்தியும் ஜனவரி-24 முதல் 4 % அகவிலைப்படி உயர்த்தி மத்திய அரசு ஆணையிட்டதை தொடர்ந்து மாநில அரசுகளும் இந்த உயர்வை மாநில அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு அறிவித்ததும் சரியே. ஆனால், இந்த அகவிலைப்படி உயர்வு விலைவாசி உயர்வின் புள்ளி விவரங்களுக்கு ஏற்ப உயர்த்தப்பட்டுள்ளதா என்கின்ற கேள்வியை முன் வைக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

**உச்சம் சென்ற தக்காளி, பூண்டு விலை**

கடந்த 2023 ஜீலை முதல் நடப்பாண்டு 2024 முடிய சராசரி மனிதனின் வருமானத்தில் பெரும்பகுதி உணவுக்காகவே செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. முன்னெப்போதும் இல்லாத அளவிற்கான உணவுப்பொருட்கள் விலை உயர்வால் அனைத்து தரப்பினருமே பாதிக்கப்பட்டுள்ளனர் என்றாலும் சராசரியாக, ஒரு ஆரோக்கியமான உணவிற்காகும் செலவு, ஓர் ஆண்டில் மட்டும் 52 சதவிகிதம் உயர்ந்துள்ளது. ஆனால், இதே காலத்தில் சராசரி ஊதிய விகிதமோ 9 முதல் 10 சதவிகிதம் வரையே உயர்ந்துள்ளது. பொதுவாகவே மாத வருமானத்தில் சம்பளம் பெறும் தொழிலாளர்களை விட, தினக்கூலித் தொழிலாளர்கள் தங்களின் வருவாயில் அதிகமான தொகையை உணவுக்காக செலவிடுகின்றனர் என்றாலும், இந்த இடைவெளி கடந்த ஆண்டில் மேலும் அதிகரித்துள்ளது. குறிப்பாக குடும்பத்தில் வருமானம் ஈட்டக்கூடிய ஒரே நபராக பெண்கள் உள்ள வீடுகளில் இந்தச்சுமை மிக அதிகமாக உள்ளது. மகாராஷ்டிராவில் ஒரு குடும்பத்தின் தினசரி இரண்டு வேளை உணவுத் தயாரிப்புக்கான மாதாந்திர செலவு கடந்த ஓராண்டில் 3 ஆயிரத்து 053 லிருந்து 4 ஆயிரத்து 631 ஆக உயர்ந்துள்ளது. தக்காளி 42.4 சதவிகிதம், வெங்காயம் (66.2 சதவிகிதம்) உருளைக்கிழங்கு 65.3 சதவிகிதம் துவரம்பருப்பு (180 சதவிகிதம்) ஆகியவற்றைச் சொல்லலாம் மிதமாக விலை உயர்ந்த உணவுப் பொருட்கள் பட்டியலில். பயிறு வகைகள் (51 சதவிகிதம்), கோதுமை (31.3 சதவிகிதம்), ஆகியவை வருகின்றன மறுபக்கத்தில் சமையல் எண்ணெய் 2.1 சதவிகிதம், அரிசி 0.7 சதவிகிதம் என விலை குறைந்துள்ளன. மாதச் சம்பளம் பெறும் நிரந்தரத் தொழிலாளர்கள், 2023 ஆண்டில் நாள் ஒன்றுக்கு ரூ.424 பெற்றனர். இது 2024-ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு ரூ.468 ஆக உயர்ந்துள்ளது. வருடாந்திர உயர்வு என்று பார்த்தால் 10.4 சதவிகிதம் தான். ஆனால், இவர்கள் உணவுக்காக தங்களின் வருவாயில் செலவிடும் தொகை 22.2 சதவிகிதம் (4.9 புள்ளிகள் அதிகரிப்பு) வரை உயர்ந்துள்ளது.

மோசமடைந்த தினக்கூலி தொழிலாளர்களின் நிலைமை தினக்கூலி தொழிலாளர்களை எடுத்துக் கொண்டால் 2023-இல் நாள் ஒன்றுக்கு ரூ.383 கூலி பெற்றனர். இது 2024-இல் நாள் ஒன்றுக்கு ரூ.425 ஆக உயர்ந்துள்ளது. வருடாந்திர ஊதிய உயர்வு 10.6 சதவிகிதம். ஆனால், இவர்கள் உணவிற்காக செலவிடும் தொகை, அவர்களின் வருமானத்தில் 31.4 சதவிகிதமாக (8.6 புள்ளிகள் அதிகரிப்பு) உள்ளது. இந்த ஆய்வின் மூலம் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் என்று பார்த்தால் 1.உணவுப் பொருட்களின் விலை உயர்வு ஊதிய உயர்வை விட கணிசமாக அதிகம். 2. தினக்கூலி தொழிலாளர்கள் தங்கள் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கை உணவுக்காகச் செலவிட வேண்டிய நிலை உள்ளது. 3. காய்கறிகளின் விலை அதிகரிப்பு மிக அதிகம் அத்தியாவசிய உணவுப் பொருட்களான அரிசி மற்றும் எண்ணெய் மட்டுமே சிறிது விலை குறைந்துள்ளது என்பவையே ஆகும். ஏழைகளுக்கு எட்டாத ஆரோக்கியமான உணவு

மேலும் 1.குடும்ப வரவு-செலவுத்திட்டத்தில் உணவுச் செலவு அதிக பங்கு வகிக்கிறது. 2.அதே நேரம் இந்த ஊதிய உயர்வு விலைவாசி உயர்வுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை 3.குறைந்த வருமானம் உள்ளவர்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். 4.ஆரோக்கியமான உணவு முறையைப் பின்பற்றுவது சவாலாக மாறியுள்ளது என்றும் ஆய்வு தெளிவு படுத்தியுள்ளது. இந்த ஆய்வு பணவீக்கம் மற்றும் உணவுப்பாதுகாப்பு தொடர்பான கொள்கை முடிவுகளுக்கு முக்கியமான உள்ளீடுகளை வழங்குகிறது. மகாராஷ்டிராவின் மும்மையை மையமாகக் கொண்டு உணவுப் பொருள் விலை உயர்வு தொடர்பான இந்த ஆய்வு நடத்தப்பட்டிருந்தாலும். நாடு முழுவதும் ஏழை மற்றும் நடுத்தர வர்க்க குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தில் உணவு விலை உயர்வு ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை புரிந்து கொள்வதற்கு இது உதவியாக அமைந்துள்ளது.

**பெட்ரோல் பொருட்கள் மீதான வரியே**

இதற்கிடையில் பெட்ரோலிப் பொருள்கள் மீது அரசாங்கம் விதித்துள்ள அதீத வரிகள் மூலமாக மக்கள் மீது ஏற்றப்பட்டுள்ள மறைமுக வரிச்சுமை கட்டுக் கடங்காமல் தொடர்கிறது. இந்த ஆண்டு ஏப்ரல் முதல் சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை 18 விழுக்காடு குறைந்தாலும். பெட்ரோல், டீசல் ஆகியவற்றின் சில்லறை விற்பனை விலைகளைக் குறைத்திடாமல். அதே அளவில் மோடி அரசாங்கம் பல்வேறு வரிகள், செஸ் வரிகள், ராயல்டிகள், பெட்ரோலிய பொருள்களின் மீதா வரிகள் ஆகியவை உள்ளிட்ட பொருள்களின் மீதான வரிகள் மூலம் பெற்ற மொத்த வருவாய் 3.5 லட்சம் கோடி ரூபாய்களாகும்.

2014 இல் மோடி ஆட்சிக்கு வந்த பின்னர், இது வரை மக்களிடமிருந்து பெட்ரோலியப் பொருட்களுக்காக மட்டும் வரி விதித்து ஈட்டியுள்ள வருவாய் என்பது 26.74 இலட்சம் கோடி ரூபாய். எவ்விதமான மனசாட்சியுமின்றி இவ்வாறு மக்களின் மீது சுமைமையப் பல மடங்கு ஏற்றி அவர்களை சொல்லொண்ணாத் துன்பத்தில் தள்ளி இருக்கிறது. ஏனெனில் பெட்ரோலியப் பொருட்களின் மீதான வரிகள் காரணமாக போக்குவரத்து செலவுகள் அதிகரித்து சாமானிய மக்கள் வாங்கும் அனைத்து அத்தியாவசிய உணவுப் பொருள்களும், காய்கறிகளும் விலை உயர்ந்து அவர்களைக் கடுமையாகப் பாதித்து வருகின்றன.

**பொது விநியோக முறையை விரிவுபடுத்துவதே தீர்வு**

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்திட பலமுறை அரசாங்கம் வாக்குறுதி அளித்த போதிலும் உருப்படியாக ஒரு நடவடிக்கையும் எடுத்திடவில்லை மாறாக வரி விதிப்பை தொடர்ந்து உயர்த்திக் கொண்டே இருப்பதாலும், கள்ளசந்தை கட்டுப்படுத்திட எந்த வித நடவடிக்கையும் மத்திய அரசு எடுக்காததும் முக்கிய காரணங்களாகும்.

**ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு உயர்த்தப்பட்ட அகவிலைப்படி**

ஆனால் கடந்த ஜீலை 23 இல் மத்திய அரசு, உயர்த்தி வழங்கப்பட்ட 4 % அகவிலைப்படியும் ஜனவரி - 2024 முதல் உயர்த்தி வழங்கப்பட்ட 4 % அகவிலைப்படியும் விலைவாசி புள்ளிகளின் உயர்வினை துல்லியமாக கணக்கீடு செய்யப்படவில்லை என்பதை காட்டுகிறது.

கடந்த 2023 ஜீலை முதல் நடப்பாண்டு 2024 சராசரி மனிதனின் வருமானத்தில் பெரும்பகுதி உணவுக்காகவே செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. முன்னெப்போதும் இல்லாத அளவிற்கான உணவுப் பொருட்கள் விலை உயர்வால், அனைத்துத் தரப்பினருமே பாதிக்கப்பட்டுள்ளனர் என்றாலும், மாதச் சம்பளம் பெறும் தொழிலாளர்களை விட தினக்கூலித் தொழிலாளர்கள் மேலும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளளர்.

**ஊதிய உயர்வும் தொழிலாளர்களின் விலை உயர்வும் :**

சராசரியாக, ஒரு ஆரோக்கியமான உணவிற்காகும் செலவு, கடந்த ஆண்டில் 52 சதவிகிதம் உயர்ந்துள்ளது. ஆனால், இதே காலத்தில் சராசரி ஊதிய விகிதமோ 9 முதல் 10 சதவிகிதம் வரையே உயர்ந்துள்ளது. பொதுவாகவே, மாத வருமானத்தில் சம்பளம் பெறும் தொழிலாளர்களை விட, தினக்கூலித் தொழிலாளர்கள் தங்களின் வருவாயில் அதிகமான தொகையை உணவுக்காக செலவிடுகின்றனர் என்றாலும், இந்த இடைவெளி கடந்த ஆண்டில் மேலும் அதிகரித்துள்ளது குறிப்பாக, குடும்பத்தில் வருமானம் ஈட்டக்கூடிய ஒரே நபராக பெண்கள் உள்ள வீடுகளில் இந்தச் சுமை மிக அதிகமாக உள்ளது. உணவுப்

பொருட்கள் விலை உயர்வு தொடர்பான இந்த ஆய்வுக்கான தரவுகள் மும்பையில் இருந்து பெறப்பட்டுள்ளன. இங்கு மும்பை சந்தை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டதற்கு அங்கிருந்து தொடர்ச்சியான தரவுகள் கிடைத்ததே காரணமாகும். ஊதிய தரவுகளும் அதே மாநிலத்தில் இருந்தே எடுக்கப்பட்டன. கடந்த கால தரவுகள் இல்லாததால் அசைவ உணவு பொருட்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

**உணவுத் தயாரிப்புக்கான மொத்த செலவு உயர்வு :**

மகாராஷ்டிராவில் இரண்டு வேளை உணவு தயாரிக்கத் தேவையான அனைத்து பொருட்களின் சராசரி செலவு இந்த ஆண்டு 154.4 ரூபாயாக உள்ளது. இது கடந்த ஆண்டை விட 52 சதவிகிதம் அதிகம் (ரூ.101.8). அதாவது மகாராஷ்டிராவில் ஒரு குடும்பத்தின் தினசரி இரண்டு வேளை உணவுத் தயாரிப்புக்கான மாதாந்திர செலவு கடந்த ஓராண்டில் 3 ஆயிரத்து 053 லிருந்து 4 ஆயிரத்து 631 ஆக உயர்ந்துள்ளது.

இந்த அதிகரிப்பு ஏழை மற்றும் நடுத்தர வர்க்க மக்களின் வாழ்க்கைத் தரத்தில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒரு வேளை ஆரோக்கியமான உணவுக்கு, 1.அரிசி (மையப்பொருள்) 2.சால்ட் (பச்சைக் காய்கறிகள், வெள்ளரிக்காய், தக்காளி) 3.ஆலு சப்ஜி (உருளைக்கிழங்கு கறி), 4.கொத்து பாஜி (பரோட்டா உடன் காய்கறி கறி) 5.சமையலுக்கான சூரியகாந்தி எண்ணெய், 6.கூட்டுக்கறி வகைகள் ஆகியவை தேவை என்ற நிலையில், இவற்றின் விலையோ ஏழைகள் வாங்க முடியாத அளவிற்கு உச்சத்திற்குச் சென்றுள்ளது.

**உச்சம் சென்ற தக்காளி, பூண்டு**

இந்தக் காலத்தில் மிக அதிகமாக உயர்ந்த உணவுப்பொருட்கள் என்றால், 1.தக்காளி(247 சதவிகிதம்). 2.உருளைக்கிழங்கு (180 சதவிகிதம்), 3.துவரம் பருப்பு (180 சதவிகிதம்) ஆகியவற்றைச் சொல்லலாம், மிதமாக விலை உயர்ந்த உணவுப்பொருட்கள் பட்டியலில் 1.பயறு வகைகள் (51 சதவிகிதம்), 2.கோதுமை (31.3 சதவிகிதம்), 3.வெங்காயம் (31.3 சதவிகிதம்) ஆகியவை வருகின்றன. மறுபக்கத்தில், சமையல் எண்ணெய் (2.1 சதவிகிதம்), அரிசி (0.7 சதவிகிதம்) என விலை குறைந்துள்ளன, மாதச் சம்பளம் பெறும் நிரந்தரத் தொழிலாளர்கள் 2023 ஆண்டில் நாள் ஒன்றுக்கு ரூ.424 பெற்றனர். இது 2024- ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு ரூ.468 ஆக உயர்ந்துள்ளது வருடாந்திர உயர்வு என்று பார்த்தால், 10.4 சதவிகிதம் தான். ஆனால், இவர்கள் உணவுக்காக தங்களின் வருவாயில் செலவிடும் தொகை 22.2 சதவிகிதம் (4.9 புள்ளிகள் அதிகரிப்பு) வரை உயர்ந்துள்ளது. மோசமடைந்த தினக்கூலி தொழிலாளர்களின் நிலைமை இதுவே தினக்கூலி தொழிலாளர்களை எடுத்துக்கொண்டால், 2023- இல் நாள் ஒன்றுக்கு ரூ.383 கூலி பெற்றனர். இது 2024-இல் நாள் ஒன்றுக்கு ரூ.425 ஆக உயர்ந்துள்ளது. வருடாந்திர உயர்வு 10.6 சதவிகிதம்.ஆனால், இவர்கள் உணவிற்காக செலவிடும் தொகை, அவர்களின் வருமானத்தில் 31.4 சதவிகிதமாக (836 புள்ளிகள் அதிகரிப்பு) உள்ளது. இந்த ஆய்வின் மூலம் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் என்று பார்த்தால், 1.உணவுப் பொரட்களின் விலை உயர்வு ஊதிய உயர்வை விட கணிசமாக அதிகம். 2.தினக்கூலி தொழிலாளர்கள் தங்கள் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கை உணவுக்காகச் செலவிட வேண்டிய நிலை உள்ளது. 3.காய்கறிகளின் விலை அதிகரிப்பு மிக அதிகம் அத்தியாவசிய உணவுப் பொருட்களான அரிசி மற்றும் எண்ணெய் மட்டுமே சிறிது விலை குறைந்துள்ளது என்பவையே ஆகும். ஏழைகளுக்கு எட்டாத ஆரோக்கியமான உணவு மேலும் 1.குடும்ப வரவு-செலவு திட்டத்தில் உணவுச் செலவு அதிக பங்கு வகிக்கிறது 2.அதே நேரம் இந்த ஊதிய உயர்வு விலைவாசி உயர்வுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. 3.குறைந்த வருமானம் உள்ளவர்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். 4. ஆரோக்கியமான உணவு முறையைப் பின்பற்றுவது சவாலாக மாறியுள்ளது என்றும் ஆய்வு தெளிவுபடுத்தியுள்ளது.

இந்த ஆய்வு, பணவீக்கம் மற்றும் உணவுப்பாதுகாப்பு தொடர்பான கொள்கை முடிவுகளுக்கு முக்கியமான உள்ளீடுகளை வழங்குகிறது. மகாராஷ்டிராவின் மும்பையை மையமாகக் கொண்டு உணவுப்பொருள் விலை உயர்வு தொடர்பான இந்த ஆய்வு நடத்தப்பட்டிருந்தாலும், மும்பையிலேயே இது தான் நிலைமை என்ற அளவிற்கு - நாடு முழுவதும் ஏழை மற்றும் நடுத்தர வர்க்க குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தில் உணவு விலை உயர்வு ஏற்படுத்தும் தாக்கத்தை புரிந்து கொள்வதற்கு இது உதவியாக அமைந்துள்ளது. ●

கட்டுரை

# ஒற்றை புள்ளியை நோக்கி நகர்கிறதா நிர்வாகம்

**- பிரகாஷ்**

மத்திய அரசு ஒரே நாடு ஒரே தேர்தல் என்கின்ற கோஷத்தை முன்னெடுத்து முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தலைமையில் குழு அமைத்து, அந்த அறிக்கையின் அடிப்படையில் அமைச்சரவையில் ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறது.

இதை தமிழகத்தை ஆளுகின்ற கட்சி மட்டுமல்லாமல் எதிர்க்கட்சிகளும் எதிர்த்து வருகின்றனர். மத்திய அரசு கூறும் காரணத்தில் பெரும்பாலானது எல்லாம் ஒன்றாக இருக்க வேண்டும் என்று நினைக்கின்றது.

ஒரே சட்டம்

ஒரே உணவு

ஒரே உடை.....

பன்முகத்தன்மை கொண்டுள்ள இந்திய மக்களுக்கு எதிரான கருத்தைத்தான் மத்திய அரசு விதைத்து கொண்டிருக்கிறது. இது ஒரு புறம் இருக்க, தமிழக அரசு தேர்தல் வாக்குறுதிகளை 99 சதவீதம் நிறைவேற்றி விட்டதாக மார் தட்டிக் கொள்கிறது.

ஆனால் நிர்வாகத்தை செயல்படுத்துகின்ற அரசு ஊழியர்களுக்கு, ஆசிரியர்களுக்கும் இதுவரை கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் இருக்கிறது அதோடு மட்டுமல்லாமல் தொடர்ச்சியாக ஊழியர்களின் நலன் சார்ந்த விஷயத்தில் அக்கறை காட்ட வேண்டிய அரசு, எதிராக செயல்படுகின்றது.

7 கோடியே 71 லட்சம் மக்கள் தொகை கொண்ட இந்த தமிழகத்தில், ஆட்சி செய்கின்ற அரசின் திட்டங்களை கொண்டு சேர்க்கின்ற அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள், காவலர்கள் என அனைத்து நிலையும் சேர்த்து 9 லட்சத்து 36 ஆயிரம் பேர் தான் இருக்கின்றனர்.

காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்புவேன் என்றும், தற்காலிக பணியாளர்களை கால முறை ஊதியத்திற்கு மாற்றம் செய்து முறைப்படுத்துவேன் என்றும் கூறிய அரசாங்கம் தொடர்ச்சியாக எதிர் நிகழ்வுகளை செய்து கொண்டு வருவதை நாம் கண்கூடாக பார்க்க முடிகிறது.

கருணை அடிப்படை, நியமனத்தை 5% ஆக குறைத்தது, நகராட்சி மாநகராட்சியில் அடிப்படை பணியாளர்களை ஒப்பந்த முறையில் மட்டுமே நியமிக்க ஆணை பிறப்பித்தது. தற்பொழுது அனைத்து துறைகளிலும் இது பரவிக் கொண்டே இருக்கிறது.

அரசின் பணியை செய்வதற்கு வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டிய இந்த அரசாங்கம், மாறாக தனியார் முதலாளிகளிடம் அந்தப் பணிகளை செய்வதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டே இருக்கிறது. தற்போது உள்ள சூழ்நிலையில் 4 1/2 லட்சம் காலி பணியிடங்கள் அரசு அலுவலகங்களில் இருந்து கொண்டிருக்கிறது. இது ஒரு புறம் இருக்க, ஒற்றை மையத்தை நோக்கி இந்த அரசு நிர்வாகம் செல்லுகிறதோ என்கின்ற ஐயப்பாடு ஊழியர்கள் மத்தியில் இருந்து கொண்டே இருக்கிறது.

அனைத்து அரசு ஊழியர்களின் தரவுகளும் தற்பொழுது தனியார் நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் மையப்படுத்தப்பட்டு இருக்கிறது அவர்கள் நினைக்கும் போது மட்டும் தான் அரசு ஊழியர்கள் ஊதியம் மற்றும் பிற பயன்களை பெற முடியும் என்கின்ற நிலைக்கு இந்த நகர்வு சென்று கொண்டிருக்கிறது. அடிப்படையான மக்களின் நலன் சார்ந்த திட்டங்களை, அங்கு இருக்கின்ற கால சூழ்நிலைக்கு ஏற்ப அவர்களுடைய தரவுகளை

உள்வாங்கிக் கொண்டு அரசு பணியாளர்கள் பணி செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் அதற்கு மாறாக கணினி வழியாக தரவுகளை பெற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு கொண்டிருக்கிறது குறிப்பாக தமிழக முதல்வர் பெருமிதமாக சொல்லுகின்ற மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் அனைத்து பணப்பட்டுவாடாக்களும் மையப்படுத்தப்பட்ட ஒரு இடத்தில் இருந்தே வழங்கப்படுகிறது. அதில் ஏற்படுகின்ற சிரமங்கள், குளறுபடிகளை பொதுமக்கள் எங்கு கேட்டாலும் தீர்வு இல்லாத நிலை தான் தொடர்கிறது. காரணம் அந்த புள்ளி விவரங்களை திருத்தவோ அல்லது புதிய நபர்களை சேர்ப்பதற்கோ கீழே இருக்கின்ற வட்டாட்சியர், கோட்டாட்சியர் ,மாவட்ட ஆட்சிளாளர்களால் கூட இயலாத சூழ்நிலை தான் உள்ளது.

ஒட்டுமொத்த தரவுகளை வைத்துக்கொண்டு தகுதியான நபர்கள், தகுதியற்றவர்கள் என்று நிர்ணயம் செய்து அந்த தொகை வழங்கப்படுகிறது. இதில் உண்மையான தகுதி உடையவர்கள் இந்தத் திட்டத்தில் பயனடைவதற்கு மாவட்ட ஆட்சியர் நினைத்தால் கூட முடியாத சூழ்நிலை தான் தொடர்ந்து கொண்டிருக்கிறது. தற்பொழுது இது பரவலாக்கப்படுகிறதோ என்கின்ற ஐயப்பாடு எழுகிறது.

வட்டாட்சியர் அலுவலகம் வழியாக முதியோர் ஓய்வூதிய தொகை(OAP) வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. கடந்த மாதத்திலிருந்து முதியோர் ஓய்வூதியத் தொகை திட்டத்தின் பயனாளிகளின் தரவுகளின் அடிப்படையில் ஒட்டுமொத்தமாக சென்னை தலைமையகத்தில் இருக்கின்ற அலுவலகத்தின் மூலமாகவே வழங்கப்பட்டது. எளிமையான ஒரு செயலாக நாம் நினைக்கலாம். ஆனால் இது நாள் வரை அந்த பணியை செய்து வந்த அந்தப் பணி கட்டமைப்பு தற்பொழுது சிதைக்கப்படுகிறது என்பது தான் எதார்த்தமான உண்மை. இது மக்கள் நலத்திட்டங்களை நோக்கி நகர்கிறது என்று நினைக்க வேண்டாம் இது தொடர்ச்சியாக அனைத்து திட்டங்களுக்கு மட்டுமல்லாமல் திட்டம் சாராத தரவுகளை நோக்கியும் இது நகர்வதற்கு சாத்தியக்கூறுகள் நிறைய இருக்கிறது. அரசு கடந்து நிதியாண்டு இறுதியில் ஒரு சில அரசாணைகளை வெளியிட்டது அதில் Single nodle Account, Globle Benfinerifer Master, SOE,. இன்று புது வார்த்தைகள் எல்லாம் ஏதோ கார்பரேட் கம்பெனி நிறுவனத்திற்கு சாதகமாக செய்வதை போலே ஊழியர்கள் மத்தியில் பேசப்பட்டு வருகிறது.

காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு பதிலாக, இருக்கின்ற காலி பணியிடங்களை அரசுக்கு ஒப்படைப்பு செய்ய வேண்டும் என்ற அதிகார வர்க்கத்தின் அலறலால் கீழ் நிலை அதிகாரிகள் அதை முன்னெடுத்து செய்ய வேண்டிய சூழ்நிலை என்பது கடந்த மூன்று ஆண்டுகளில் வெளிப்படையாகவே தெரிகிறது. வணிகவரித்துறையில் சீரமைப்பு என்ற பெயரில் பல பணியிடங்களை அரசுக்கு ஒப்படைத்து புதிய பணியிடங்கள் மாற்றப்பட்டிருக்கிறது, நில அளவைத் துறையிலும் இது போன்ற நிகழ்வு நடந்தேறி இருக்கிறது. ஏதோ அந்த துறையில் என்று மட்டும் நினைக்க வேண்டாம், பெரும்பாலான துறைகளில் இது புல்லுருவிகளாக ஊடுருவி தான் இருக்கிறது.

அரசு ஊழியர்களின் மத்தியில் அவர்கள் தேர்தல் காலத்தில் முதல்வர் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவார் என்கின்ற எண்ணத்தில் இருக்கும் பொழுது கன்னத்தில் கை வைக்கும் அளவிற்கு பணியிடங்கள் இங்கு மாற்றப்பட்டு கொண்டிருக்கிறது

இதன் விளைவு ஒவ்வொரு ஊழியர்களுக்கும் பணிச் சுமை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இதன் விளைவு அரசு ஊழியர்களின் உடல்நலம் பாதிக்கப்பட்டு கொண்டு இருக்கின்றது குறிப்பாக சர்க்கரை நோய், உயர் இரத்த அழுத்தம் நோயால் பாதிக்கப்படுகின்றனர். கடந்த மூன்று ஆண்டுகளில் மன அழுத்தத்தால் தன் உயிரையும் மாய்த்துக் கொள்ளும் ஊழியர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்பதை அரசு கவனமுடன் பரிசீலிக்க வேண்டி இருக்கிறது. ஊழியர்களின் நலனை பாதுகாக்க வேண்டிய இந்த அரசு, கொஞ்சம் கூட கவலைப்படாமல்

தன்னலத்தை மட்டும் பார்த்துக் கொள்கிறது. அரசு அலுவலகங்களில் கணினிகளைக் கொண்டு வருவதிலும், அறிவியல் மாற்றத்தை கொண்டு வருவதிலும் எந்த ஆட்சேபனையும் இல்லை ஆனால் அது அடிப்படை கட்டமைப்பை சிதைக்கின்ற செயல்களை செய்கிறது அதைக் கண்டு கொள்ளாமல் அரசு இருக்கிறது. e office தலைமைச் செயலகம் முதல் அனைத்து அலுவலகங்களிலும் தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டு கொண்டிருக்கிறது (இது மத்திய அரசு திட்டம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்) இதனால் ஒரு அலுவலகத்தினுடைய தபால் பிரிவில் பணிபுரிகின்ற, ஆவணங்களை பாதுகாக்கின்ற அடிப்படை பணி இடங்கள் வெகு விரைவில் காணாமல் போகும் சாத்திய கூறுகள் உள்ளது.

இது போல் தான் கருவூலத்துறையில் இளநிலை உதவியாளர் பிணையம் என்கின்ற பதவி 99 சதவீதம் காலியாகவே இருக்கிறது.

பல துறைகளில் கணினியை கொண்டு வருவதால், அரசு நிர்வாகத்தை கணினிக்குள் புகுத்துவதால், மக்களுக்கு விரைவாக சேவை கிடைக்கும் என நம்புகின்ற இந்த அரசு, மக்களுக்கு அது கூடுதலான சுமையை தான் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன என்ற எதார்த்தமான களநிலவரத்தை இன்னும் புரிந்து கொள்ளவே இல்லை.

வட்டாட்சியர் அலுவலகங்களின் அருகில் காளானை போல் ஒட்டி இருக்கின்ற இ சேவை மையங்கள், நகரம் முழுவதும் பரவி இருக்கின்ற தனியார் இ சேவை மையங்களிடம் ஒவ்வொரு சேவைக்கும் மக்கள் கொடுக்கின்ற பணம் எவ்வளவு தெரியுமா?

அரசின் வருவாய் அரசு கஜானாவுக்கு செலுத்து சீட்டு மூலம் வந்து கொண்டிருந்த நிலை, இன்று e Challan ஆக மாறியதால் 20 ரூபாய் கட்ட கணினி மையத்திற்கு ரூ.50 கொடுக்கின்ற நிலை தான் இருக்கிறது. இது எப்படி சேவை அரசாக இருக்க முடியும்? கணினி என்பது கற்றுத் தேர்ந்த கல்வியறிவு பெற்ற இளைய தலைமுறைக்கு சாத்தியம், தமிழகத்தில் கற்றோர்கள் இருக்கலாம். ஆனால் கணினி இன்னும் அவர்களின் பழக்கத்திற்கு வரவில்லை மூத்த குடிமக்களுக்கும் இது இன்னும் புலப்படாத நிலையில் தான் எட்டாக் கனியாகத்தான் கணினி இருக்கிறது. கருவூலத்தில் அமல்படுத்தப்பட்டு வருகின்ற நேர்காணலுக்கும் கணினி வழியாக செய்ய வேண்டும் என்று அவர்களை வலியுறுத்துவது அலைச்சலையும் மன உளைச்சலையும் ஓய்வு பெற்றவர்களுக்கு இந்த அரசாங்கம் மறைமுகமாக தருகிறது என்கிற எதார்த்தமான உண்மை கூட புரிந்து கொள்ள முடியாமல் தான் நிர்வாகம் உள்ளது.

வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குதிலும், அரசு திட்டங்களுக்காக தொடங்கப்படுகின்ற புதிய பணியிடங்களில் அந்த இளைஞர்களை அமர்த்துவதும் தான் சாலச்சிறந்தது அதற்கு எதிர் மாறாக திட்டங்களை கொண்டு வருகிறபோது திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்கின்ற பொழுது, திட்டங்களின் நிர்வாக செயல்பாட்டிற்காக நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்படுகிறது அதன் விளைவு புதிய பணியிடங்கள் உருவாக்கப்படாமலும் ஒரு வேலை வாய்ப்பு அங்கு இல்லாமலும் மறுக்கப்படுகிறது.

சமூக நீதியை பற்றி பேசும் இந்த அரசாங்கம் சமநீதியுடன் அனைத்து ஊழியர்களையும் நடத்த வேண்டும் தானே! ஆனால் நீதிபதிகளுக்கு ஒன்றும் மற்ற அரசு ஊழியர்களுக்கு ஒன்றாகவும் பாவிக்கின்ற செயல்பாடு எப்படி சமூக நீதியாகும்?

உதாரணமாக ஒரு நீதிபதியின் மருத்துவ படி ரூ3000 பெறுகிறார். ஒரு அரசு ஊழியர் ரூ 300 பெறுகிறார் அதுவும் காப்பீடு திட்டத்தில் ரூ300/- பிடித்தம் மலைக்கும் மடவுக்கும் உள்ள இடைவெளி ஊழியர்கள் மற்றும் பொதுமக்களின் தரவுகள் மையப்படுத்தப்பட்டு ஒரு தனியார் நிறுவனத்தின் அல்லது ஒரு சில நபர்களின் கையில் இருப்பது மிகப்பெரிய ஆபத்தை எதிர்காலத்தில் சந்திக்க நேரிடும்...

சங்க உணர்வோடு களத்தில் நின்று போராடினால் தான் இழந்ததையும் இருப்பதையும் இழக்கப்போவதையும் பாதுகாக்க முடியும். களம் காண்போம் வாருங்கள் தோழர்களே!!! ●

கட்டுரை

# தீண்டாமைச் சுவர் அகற்றும் போராட்டம் – திருப்பூர்

**மா.பாலசுப்பிரமணியன்**

திருப்பூர் மாவட்டம் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை தாராபுரம் கோட்டம் வெள்ளகோவில் உதவி கோட்ட பொறியாளர் நெடுஞ்சாலைத்துறை அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள பயணியர் விடுதி காவலர் குடியிருப்பில் இருந்து நேரடியாக வரும் பாதையை மரித்து சுவர் எழுப்பி மனரீதியாக துன்புறுத்தியது, தீண்டாமை நோக்குடன் செயல்பட்டது போன்ற நடவடிக்கைகள் சங்கத்தின் கவனத்திற்கு வரப்பட்ட போது அது குறித்து பேசி சமூக தீர்வு ஏற்படுத்த முயற்சி செய்த நிலையில் உதவிக்கோட்ட பொறியாளர் சமூக தீர்வு ஏற்படுத்த நேரில் சந்திக்க சென்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட நிர்வாகிகளையே நீங்கள் எந்த சாதியைச் சேர்ந்தவர்கள் என்று கேட்டு அநாகரிகமான முறையில் நடந்து கொண்டார் அவர் தீண்டாமை நோக்குடன் செயல்பட்டார் என்பதற்கு நேரடியாக அவரின் நடவடிக்கை சாட்சியமாக அமைந்த நிலையில் உதவிக்கோட்ட பொறியாளர் வெள்ளகோவில் நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தீண்டாமை நோக்குடன் எழுப்பப்பட்ட சுவரினை இடித்து பாதை ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயற்குழு முடிவின் அடிப்படையில் 14.10.2024 அன்று உயர்திரு கோட்ட பொறியாளர் நெடுஞ்சாலைத்துறை உயர்திரு கண்காணிப்பு பொறியாளர் நெடுஞ்சாலைத்துறை திருப்பூர் உயர்திரு மாவட்ட ஆட்சித் தலைவர் திருப்பூர் மாவட்டம் ஆகியோரை நேரில் சந்தித்து மாவட்ட நிர்வாகிகள் வட்டக்கிளை நிர்வாகிகள் மனு அளித்து வலியுறுத்தினர்.

அதனைத்தொடர்ந்து 16.10.2024 அன்று தீண்டாமைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வெள்ளகோவில் உதவி கோட்ட பொறியாளர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் நடைபெற இருந்த தீண்டாமை எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தினை தொடர்ந்து காலை 12 மணி அளவில் உயர்திரு கோட்ட பொறியாளர் நெடுஞ்சாலை துறை கமப தாராபுரம் அவர்கள் சங்கத்தின் தலைவர்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்து அழைப்பானை வழங்கியதின் பேரில் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் எ.ராணி,மாவட்ட செயலாளர் மா.பாலசுப்பிரமணியன், மாநிலச் செயலாளர் ஆ.அம்சராஜ், மாவட்ட துணைத் தலைவர் எஸ். மதன்குமார், மாவட்ட இணைச் செயலாளர் எம். மேகலிங்கம், மாவட்ட இணைச்செயலாளர் தா.வைரமுத்து, மாவட்டத் துணைத் தலைவர் அன்னபூரணி, மாவட்ட துணைத் தலைவர் டி. புஷ்பவல்லி, தமிழ்நாடு அரசு சங்கத்தின் தாராபுரம் வட்டக்கிளை தலைவர் கே. செந்தில்குமார், வட்டக்கிளை செயலாளர் இல.திளல்லையப்பன் வட்டக்கிளை பொருளாளர் கே ஆறுமுகம், வட்டக்கிளை தலைவர் எஸ் சுமதி, வட்டக்கிளை துணைத் தலைவர் ஜெ. ரவி காங்கேயம், மணிவேல் இணைச் செயலாளர் காங்கேயம், நாட்ராயன் செயற்குழு உறுப்பினர் காங்கேயம், ஆகியோர் பேச்சுவார்த்தையில் பங்கேற்று கீழ்கண்டவாறு வலியுறுத்தப்பட்டது. மனிதனை மனிதனாக பாவித்து நடத்த வேண்டும். தீண்டாமை நோக்குடன் அரசு அலுவலரே செயல்படுவது தவிர்க்கப்பட வேண்டும். மனரீதியாக துன்புறுத்தும் போக்கை நிறுத்திக் கொள்ள வேண்டும். தீண்டாமை நோக்குடன் எழுப்பப்பட்ட சுவரை திருத்தம் செய்து

பயணியர் விடுதி காவலர் குடியிருப்பில் இருந்து பயணியர் விடுதிக்கு நேரடியாக செல்லும் வகையில் பாதை அமைத்து தர வேண்டும். என்கிற அடிப்படையில் சங்கத்தின் சார்பில் வலியுறுத்தப்பட்டது. சங்கத்தின் சார்பில் முன்வைக்கப்பட்ட அனைத்து அம்சங்களும் ஏற்கப்பட்ட நிலையில் 16.10.2024 அன்று நடைபெற இருந்த தீண்டாமை எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் விளக்க கூட்டமாக நடைபெற்றது.

விளக்கக் கூட்டம் தொடங்குவதற்கு முன்பாகவே பயணியர் விடுதி காவலர் பயணியர் விடுதிக்கு நேரடியாக வருவதற்கான முறையில் சுவர் இடிக்கப்பட்டு பாதை அமைப்பதற்கான பணிகள் நடைபெற்றது. என்பது குறிப்பிடத் தகுந்தது. சங்கத்தின் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி ஆகும். ●

# அஞ்சலி



**கவிஞர் தணிகைச்செல்வன்**

**மறைவு: 29.10.2024**

போராடி பெற்றவற்றை
போராடி மீட்க வேண்டும்
போராடி மீட்டவற்றை
போராடிக் காக்க வேண்டும்
போராடும் வழியை விட்டால்
புதுவாழ்வு என்பதற்கு
வேறென்ன வழி உனக்கு
விடியலை காண்பதற்கு

- *தணிகைச்செல்வன்* ●

# வாசகர் கடிதம்

**- ம.அந்தோணிசாமி**

அக்டோபர் மாத இதழ் அட்டைப்பட வாசகம் இந்த காலகட்டத்தில் தொழிலாளர்களுக்கும் நம்மைப் போன்ற ஊழியர்களுக்கும் போராடும் உணர்வை தூண்டும் வாசகம் ஆசிரியர் குழுவிற்கு பாராட்டுகள். தலையங்கம் மிகச் சரியாக கால கண்ணாடியாக பிரதிபலித்துள்ளது. பொதுச்செயலாளர் மேஜையிலிருந்து, மிகச் சரியாக ஒன்றிய அரசின் பார்வை குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதும் அதே சமயம் மாநில அரசின் அணுகுமுறையையும் திராவிட மாடல் என்று கூறிக்கொண்டு இளைஞர்களுக்கு மறுக்கப்படும் வேலைவாய்ப்பை சுட்டிக்காட்டியதும் மிகச் சரியானது இதன் மூலம் போராட்ட அறைகூவலுக்கு மாநாட்டை நோக்கி பயணிப்பதே சரி என்பதை வலியுறுத்தியுள்ளார் பொதுச் செயலாளர். சிந்துவெளிநாள் செப்டம்பர் 20. சா. தமிழ்ச்செல்வன் அவர்களின் தீக்கதிர் கட்டுரை, தீக்கதிர் படிக்காத நமது இதழை படிப்பவர்களுக்கு ஒரு மாற்றுக் கருத்தினை விதைக்கும் என நம்புகிறேன். இந்தியாவில் தமிழகத்தில் ஆரியத்தின் சிந்தனையே மேலோங்கி உள்ளது. பூர்வ குடிகளின் சிந்தனை ஓங்க வேண்டும் அதற்கு இந்த கட்டுரை ஒரு சிறு வழிகாட்டி ஏஐ குறித்த மு. பாஸ்கரன் அவர்களின் கட்டுரை ஆபத்தை சுட்டிக்காட்டி உள்ளது. மனித வாழ்வின் ஒரு பகுதியாக மனித சமூகம் மேம்பட உதவி புரிவதற்குரியதாக அதனை பயன்படுத்த நாம் வழிகாட்டுவோம். விஞ்ஞான வளர்ச்சி முறையில் எல்லாம் வேகமாக மாறி வருவதை க.நீதிராஜா அவர்களின் கட்டுரை சுட்டிக்காட்டி உள்ளது இதிலிருந்து நாம் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை சுட்டிக்காட்டி உள்ளார். வாழ்த்துக்கள்!.

தோழர் சீத்தாராம் யெச்சூரி அவர்களுக்கு செவ்வணக்கம். உங்களது வழிகாட்டலில் பின்தொடர்வோம். கிருஷ்ண பிரியா அவர்களின் கவிதை ஆணாதிக்க சமூகத்தில் பெண்களின் நிலை குறித்தும் அதில் ஆண் பெண் உறவு குறித்தும் கூறியுள்ளது அவர் யோசிப்பது போல் நாமும் யோசிப்போம் தாத்தாவும் பாட்டியும் காதலை வெளிப்படுத்தும் செயல்பாடு குறித்து. பென்ஷன் குறித்தும் ஒருங்கிணைந்த பென்ஷன் குறித்தும் நாம் வகுப்பெடுக்க வேண்டும் என்ற புரிதலை பிரகாஷ் அவர்களின் கட்டுரை உணர்த்துகிறது. ●

# கண்களைக் கொஞ்சம் மூடிக் கொள்ளுங்கள்

– கிருஷ்ணப்பிரியா

துருவேறிப் போன
உங்கள் கண்களைக் கொஞ்சம்
மூடிக் கொள்ளுங்கள்

உங்கள் அதிகாரப் பார்வைகளற்ற
விடுதலை வெளியில்
என் உடலை சற்று உலவ விடவும்

தொடர்ந்த வேலைகளால்
களைத்துப் போன
என் உடலுடன்
பதட்டம் ஏதுமின்றி
இயல்பாய் சாய்ந்து கொள்ளவும்

சாதி மத தளைகளிலிருந்து
விடுவித்துக் கொண்டு
என்னை நானே
ஆராதித்துக் கொள்ளவும்
ஏங்குகிறது உள்ளம்

இறுகிப் போன உங்கள் விதிகளால்
மூச்சுத் திணறுகிறேன்
அன்பென்றும் பண்பென்றும்
பலப்பல பெயர்கள் சூட்டிக்கொண்டு
என்னை உற்று நோக்கும்
அந்தக் கண்களை வெறுக்கிறேன்

சாதி, மதச்சாயம் ஏறியிருக்கும்
விஷம் தோய்ந்த
அந்தக் குரூரக் கண்களை
கொஞ்சம் மூடிக் கொள்ளுங்கள்

கண்களை திறந்து வைத்திருக்கும்
எந்த ஒரு தருணத்திலும் கூட
அவற்றை குத்துகின்ற
சிறு விரலாய் நான் மாறிவிடக் கூடும்

உங்கள் நலம்நாடும் அன்புடனே தான்
சொல்லுகிறேன்
அந்தக் கண்களை
இனி திறவாதிருங்கள்... •

# மாவட்ட மாநாடுகள்

## தஞ்சாவூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க, தஞ்சாவூர் மாவட்ட, 15வது மாவட்ட மாநாடு 19.10.2024 அன்று தஞ்சாவூரில், மாஸ் திருமண மண்டபத்தில் மாவட்ட தலைவர் (பொறுப்பு) தோழர் பா.முருகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கொடியினை மாநிலச் செயலாளர் தோழர் எஸ். ஹேமலதா அவர்களும், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் கொடியினை மாநிலச் செயலாளர் தோழர் சா.கோதண்டபாணி அவர்களும் ஏற்றி வைத்தனர். மாவட்டத் துணைத்தலைவர் தோழர்.தி.இரவிச்சந்திரன், அஞ்சலித் தீர்மானத்தை வாசித்தார். மாவட்ட இணைச் செயலாளர் தோழர் ஆ.தமிழ்வாணன் வரவேற்புரை ஆற்றினார். மாவட்டச் செயலாளர் தோழர் ஆ.ரெங்கசாமி வேலை அறிக்கையினையும், மாவட்டப் பொருளாளர் தோழர் கு.பாஸ்கரன் வரவு - செலவு அறிக்கையினையும், மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர் ஏ.ஆர். கவிதா மகளிர் துணைக்குழு அறிக்கையினையும் வைத்தனர். முன்னாள் மாநிலச் செயலாளர் தோழர் இரா.பன்னீர்செல்வம், தமிழ்நாடு அரசு அனைத்துறை ஓய்வூதியர் சங்க மாவட்டத் தலைவர் தோழர் இரா.கலியமூர்த்தி, அகில இந்திய இன்சூரன்ஸ் ஊழியர் சங்க தஞ்சை கோட்டத்தலைவர் தோழர் எஸ்.செல்வராஜ், தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்க மாவட்டத் தலைவர் தோழர் த.இதயராஜா, தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநிலச் செயலாளர் தோழர் இரா.கண்ணதாசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். பணி ஓய்வு பெற்ற வட்ட நிருவாகிகளுக்கு நினைவு பரிசு வழங்கி முன்னாள் மாவட்டத் தலைவர் தோழர் சிவ.இரவிச்சந்திரன் பாராட்டுரை வழங்கினார். மாநிலச் செயலளார் தோழர் ச.ஹேமலதா நிறைவுரை ஆற்றினார். மாவட்ட இணைச் செயலாளர் தோழர் ஆ.செந்தில்குமார் நன்றி கூறினார்.

இந்த மாவட்ட மாநாட்டில் கீழ்கண்ட புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். மாவட்டத்தலைவர் தோழர் ஆ.செந்தில்குமார் (மருத்துவத்துறை) துணைத்தலைவர்கள் தோழர் ஏ.ஆர்.கவிதா (சத்துணவுத்துறை), தோழர்ஆ.தமிழ்வாணன் (கால்நடை பராமரிப்புத்துறை) தோழர் பா.பார்த்தசாரதி (வருவாய்த்துறை), தோழர் என்.தேசிங்குராஜன் (ஊரகவளர்ச்சித்துறை) மாவட்ட செயலாளர் தோழர்.ஆ.ரெங்கசாமி (நெடுஞ்சாலைத்துறை), இணைச்செயலாளர்கள் தோழர் டி.ஜெயக்குமார் (வருவாய்த்துறை) தோழர் மு.ஹேமலதா (வேளாண்மைத்துறை) தோழர் பொ.வெங்கடேசன் (மருத்துவத்துறை - சித்தா) தோழர் இரா.ரமேஷ் (புள்ளியியல்த்துறை) மாவட்டப் பொருளாளர் தோழர் கோ.ராதாகிருஷ்ணன் (நெடுஞ்சாலைத்துறை) மாவட்டத்தணிக்கையாளர் தோழர் ஜெ.பலராமன் (வேளாண்மைத்துறை).

## தூத்துக்குடி

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தூத்துக்குடி மாவட்ட மாநாடு எம்.ஆர். அப்பன் இல்லத்தில் நடைபெற்றது.

காலை 10 மணிக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கொடியினை மாவட்டத் தலைவர் சின்னத்தம்பி ஏற்றி வைக்க, மாநில பொதுச் செயலாளர் ஆ. செல்வம் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் கொடியினை ஏற்றி வைத்தார். மாவட்டத் தலைவர் அ. சின்னத்தம்பி தலைமையேற்றார். மாவட்ட இணைச் செயலாளர் பா.பேச்சியம்மாள் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். சோ. மகேந்திர பிரபு வரவேற்புரை வழங்கினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர்

ஆ. செல்வம் தொடக்கவுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் தே.முருகன் வேலை அறிக்கை வாசிக்க, மாவட்டப் பொருளாளர் மு. தமிழரசன் வரவு செலவு அறிக்கை வாசித்தார். அ. அன்புச்செல்வன், பி.செல்லதுரை, அ.பிரான்சிஸ் ஆகியோர் தீர்மானங்கள் முன்மொழிந்தனர்.

TNGEPA மாவட்டச் செயலாளர் இல. ராமமூர்த்தி மாநாட்டை வாழ்த்தி உரையாற்றினார்.துணைப் பொதுச் செயலாளர் என். வெங்கடேசன் சிறப்புரையாற்றினார் மாநிலத் துணைத் தலைவர் C.S.கிறிஸ்டோபர் நிறைவுரையாற்றினார். மாநாட்டில் தூத்துக்குடி மாவட்ட புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர் மாவட்டத் தலைவராக சோ. மகேந்திர பிரபு (ஊரக வளர்ச்சித் துறை),துணைத் தலைவர்களாக ஞா.ஞானராஜ் (வருவாய்த்துறை)மு. தமிழரசன் (சத்துணவு துறை) பா. பேச்சியம்மாள் (கல்வித்துறை) அ.அன்புச்செல்வன் (ஊரக வளர்ச்சி துறை) ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்டச் செயலாளராக தே.முருகன் (வணிகவரித்துறை) தேர்வு செய்யப்பட்டார். இணைச்செயலாளர்களாக அ.சுவாமிநாதன் (வருவாய்த்துறை) பி. செல்லதுரை (சத்துணவு துறை) த. மகாராஜன் (மீன்வளத்துறை) ராஜ முருகேசன் (ஊரக வளர்ச்சி துறை) ஆகியோரும்,பொருளாளராக அ.சாம் டேனியல் ராஜும் (கூட்டுறவுத்துறை)ஒரு மனதாக தேர்வு செய்யப்பட்டார்கள்.ஜெ.உமாதேவி நன்றி கூற மாநாடு நிறைவுற்றது.

## திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளி மாவட்ட 15 ஆம் மாவட்ட மாநாடு மாவட்டத் தலைவர் கா.பால்பாண்டி தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கொடியை ஏற்றி வைத்து அவர் தலைமை உரையாற்றினார். அகில இந்திய மாநில அரசு ஊழியர் சங்கத்தின் கொடியினை ஏற்றி வைத்த மாநில துணைத்தலைவர் ப. செல்வராணி மாநாட்டினை தொடங்கி வைத்து தொடக்க உரையாற்றினார்.

அஞ்சலி தீர்மானத்தை மாவட்ட துணைத் தலைவர் மு.ஜீவானந்தம் முன்மொழிந்து ஒரு நிமிடம் அஞ்சலி செலுத்தப்பட்டது. மாவட்ட துணைத் தலைவர் பெ.வெங்கடேசன் வரவேற்புரையாற்றினார்.

மாவட்டச் செயலாளர் சி.அ. பாபு கடந்த மாவட்ட பிரதிநிதித்துவ பேரவைக்கு பிறகு மேற்கொண்ட செயல்பாடுகளையும், மேற்கொண்ட இயக்க நடவடிக்கைகளையும், பல்வேறு துறைவாரி சங்க நடவடிக்கைகளையும் வேலை அறிக்கையாக சமர்ப்பித்தார். மாவட்டப் பொருளாளர் கா.சிவசங்கர் சங்கத்தின் வரவு செலவு அறிக்கை முன்மொழிந்தார். மகளிர் துணைக் குழு அமைப்பாளர் ந. அமுதவல்லி மகளிர் துணை குழு அறிக்கை சமர்ப்பித்து மகளிர் குழு மேற்கொண்ட செயல்பாடுகளை எடுத்துரைத்தார். மாவட்ட மாநாட்டில் பழைய ஓய்வூதிய திட்டத்தை நிறைவேற்ற வேண்டும், காலி பணியிடங்களை நிரப்ப வேண்டும் உள்ளிட்ட 33 அரசு ஊழியர் கோரிக்கைகளும், 16 பொதுவான கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்டன. சிஐடியு மாவட்டச் செயலாளர் எஸ். ரெங்கராஜன், அனைத்து துறை ஓய்வூதிய சங்கத்தின் மாநிலச் செயலாளர் எம்.வி.செந்தமிழ்ச்செல்வன், தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட செயலாளர் சி.ஆரோக்கியராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர்கள் சங்கத்தின் முன்னாள் மாநிலத் தலைவர் எஸ்.சுடலையாண்டி சிறப்புரையாற்றினார். முன்னாள் மகளிர் துணைக் குழு அமைப்பாளர் ப.சத்தியவாணியை பாராட்டி நினைவு பரிசு வழங்கப்பட்டது. மாவட்டச் செயலாளர் அறிக்கை மீது வட்டக்கிளை நிர்வாகிகள் விவாதித்தார்கள். மாவட்டப் பொருளாளர் சிவசங்கர் மற்றும் மாவட்ட துணைத் தலைவர் ஜீவானந்தம், வெங்கடேசன் ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தார்கள்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பொருளாளர் பாஸ்கரன் நிறைவுரையாற்றினார். மாநாட்டில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டார்கள். மாவட்டத் தலைவராக

முனைவர் கா.பால் பாண்டி, மாவட்டச் செயலாளராக சோ.நவநீதன், மாவட்ட பொருளாளராக கா.சிவசங்கர், மாவட்ட துணைத் தலைவர்களாக மு.ஜீவானந்தம், ப.செந்தில்குமார், ஐஅல்போன்ஸா, க.பிரேம்குமார், இணைச்செயலாளர்களாக வெ.கோபாலன், கோ.வெங்கடேஷ்பாபு, சண்முகம், ச.பெரியசாமி. மகளிர் துணைக் குழு அமைப்பாளராக ந.அமுதவல்லியும், துணை அமைப்பாளராக ராமலெட்சுமியும், மாவட்ட தணிக்கையாளராக சுரேஷ் பிரபு மற்றும் த.அமுதா தேர்வு செய்யப்பட்டார்கள். இறுதியாக புதிய மாவட்ட செயலாளர் நவநீதன் நன்றி கூறினார்.

## கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் இரண்டாவது மாவட்ட மாநாடு கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் மாவட்டத் தலைவர் ஆனந்த கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. முன்னதாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கக் கொடியை மாநிலச் செயலாளர் அண்ணா குபேரனும், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் சங்கத்தின் கொடியை மாவட்டச் செயலாளர் கே.மகாலிங்கமும் ஏற்றி வைத்தனர். அனைவரையும் மாவட்ட இணைச் செயலாளர் வீ ரங்கசாமி வரவேற்று பேசினார்.

மாவட்ட இணை செயலாளர் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்ட மாநாட்டை மாநிலச் செயலாளர் அண்ணா குபேரன் தொடங்கி வைத்தார் மாவட்டச் செயலாளர் கே.மகாலிங்கம் வேலை அறிக்கை தாக்கல் செய்தார். மாவட்டப் பொருளாளர் ரவி வரவு செலவு அறிக்கை வாசித்தார். மாநாட்டை வாழ்த்தி இந்திய தொழிற்சங்க மையத்தின் மாவட்டச் செயலாளர் செந்தில், தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாநிலச் செயலாளர் ரஹீம், தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப் பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாவட்டத் தலைவர் சச்சின் காரல் மார்க்ஸ், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் கொளஞ்சி வேலு, மாவட்டச் செயலாளர் சந்திரசேகரன், மாநில செயற்குழு உறுப்பினர் குமாரதேவன் அனைத்து மருந்தாளுநர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் பி.எஸ்.மலர்கொடி, சுகாதார ஆய்வாளர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் சீனிவாசன், தமிழ்நாடு வேளாண்மை துறை அமைச்சு பணியாளர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் கே. செந்தில், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் விஜயா, தமிழ்நாடு கிராம சுகாதார செவிலியர் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் வேளாங்கண்ணி, தமிழ்நாடு நெடுஞ்சாலை சாலைப் பணியாளர் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் முத்து, தமிழ்நாடு கால்நடைத் துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட துணைத் தலைவர் சுப்பிரமணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அறிக்கையின் மீது அனைத்து வட்டக் கிளை பிரதிநிதிகளும் விவாதங்களை முன்வைத்தனர். அறிக்கை ஏக மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.பின்னர் மாவட்ட மகளிர் மாநாடு நடைபெற்றது. மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் காஞ்சனா மேரி அறிக்கை வாசித்தார்.அகில இந்திய பள்ளி ஆசிரியர் கூட்டணியின் பொதுக்குழு உறுப்பினர் சுதா, தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் விஜயலட்சுமி, தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட அமைப்பாளர் கல்யாணி, தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாவட்டப் பொருளாளர் சந்திரா மேரி ஆகியோர் மாநாட்டை வாழ்த்திப் பேசினர். மகளிர் மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

மாவட்ட மாநாட்டில் 29 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தீர்மானங்களை மாவட்ட நிர்வாகிகள், வட்டக்கிளை தலைவர், செயலாளர் ஆகியோர் முன்மொழிந்தனர். மாவட்ட மாநாட்டில் கீழ்க்கண்ட நிர்வாகிகள் ஏகமானதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மாவட்டத் தலைவராக அனந்தகிருஷ்ணன் வருவாய்த்துறை, மாவட்ட துணைத் தலைவர்களாக ப. ரவி பொது சுகாதாரத்துறை, டி.ஆறுமுகம் பொது சுகாதாரத்துறை,

கே.செந்தில் முருகன், நில அளவைத் துறை, வீரபுத்திரன், ஊரக வளர்ச்சித் துறை ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டனர்.

மாவட்டச் செயலாளராக கே. மகாலிங்கம், பொது சுகாதாரத்துறை, மாவட்ட இணைச் செயலாளர்களாக வி.ரங்கசாமி, ஊரக வளர்ச்சி துறை டி.மணிராஜ், பத்திர பதிவுத்துறை, கே.செந்தில், வேளாண்மைத் துறை, ஜி.விஜயா, சமூக நலத்துறை ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்டப் பொருளாளராக சாமிதுரை, நெடுஞ்சாலைத்துறை, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளராக சந்திரா மேரி சமூக நலத்துறை, மாவட்ட தணிக்கையாளர்களாக அன்பழகன் காஞ்சனா மேரி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இறுதியில் மாநிலத் தலைவர் சா.டேனியல் ஜெய சிங் நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் ஏ.சாமிதுரை நன்றி கூறினார்.

## திண்டுக்கல்

திண்டுக்கல் மாவட்ட 15 வது மாவட்ட மாநாடு 26.10.24 அன்று காலை 11 மணிக்கு பேரணியுடன் நடைபெற்றது. மாவட்ட மாநாட்டு பேரணியை, திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் ஆர் சச்சிதானந்தம் அவர்கள் துவக்கி வைத்தார். பேரணியில் பல்வேறு துறைகளைச் சார்ந்த ஊழியர்கள் சுமார் 750 க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றார்கள். மாநாட்டிற்கு மாவட்ட தலைவர் எஸ் முபாரக் அலி தலைமையேற்றார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கொடியை மாவட்ட தலைவர் முபாரக் அலி, அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன கொடியை மாநிலத் துணைத் தலைவர் மொ.ஞானதம்பி ஆகியோர் ஏற்றி வைத்தனர். அஞ்சலி தீர்மானத்தை மாவட்டத் துணைத் தலைவர் ஏ. ஜெசி முன் மொழிந்தார். மாவட்ட துணைத் தலைவர் டி.ராஜமாணிக்கம் வரவேற்புரையாற்றினார் .மாநாட்டை தொடக்கி வைத்து இந்திய தொழிற்சங்க மைய (சிஐடியு) மாவட்டச் செயலாளர் கே.பிரபாகரன் உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் ம.சுகந்தி வேலை அறிக்கையையும், மாவட்டப் பொருளாளர் ச.குப்புசாமி வரவு செலவு அறிக்கையையும் வாசித்தனர்.

மாநாட்டை வாழ்த்தி தமிழ்நாடு வருவாய் துறை அலுவலர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் ஜான் பாஸ் டல்லஸ், அகில இந்திய இன்சூரன்ஸ் ஊழியர் சங்கத்தின் கோட்டத் துணை தலைவர் டி.வாஞ்சிநாதன், அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் எம். எல். கேசவன், சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் பி. எம். ராமு, நகராட்சி மாநகராட்சி அலுவலர் சங்கத்தின் மாநிலத் தலைவர் முருகானந்தம், சாலைப் பணியாளர் சங்கத்தின் கோட்டத் தலைவர் ராஜா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாவட்ட துணை தலைவர்கள் வல்லவன், ஆரோக்கிய பாப்புலட் மாவட்ட இணைச்செயலாளர்கள் வி. ஜெயபால், எஸ் ராஜாத்தி, மாநில செயற்குழு உறுப்பினர் ராஜாமணி ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர்.

1.திண்டுக்கல் நகரின் வளர்ச்சிக்கான புதிய பஸ் நிலையத்தை புறவழிச் சாலையில் ஏற்படுத்த வேண்டும், 2.மாவட்ட ஆட்சியரக பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும், 3.புதிய பென்ஷன் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும், உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதன் பின்பாக நடைபெற்ற புதிய மாவட்ட நிர்வாகிகள் தேர்வில் மாவட்ட தலைவராக எஸ் முபாரக் அலி (மோட்டார் வாகன பராமரிப்புத் துறை) துணைத் தலைவர்களாக ஏ.ஜெசி (சத்துணவுத் துறை)

டி.ராஜமாணிக்கம், (நெடுஞ்சாலைத்துறை) டி. வல்லவன் (பொது சுகாதாரத்துறை) ஆரோக்கிய பாப்புலட் (மருத்துவத்துறை) ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட இணைச் செயலாளர்களாக கே.மகாராஜா (வருவாய்த்துறை), வி.ஜெயபால் (நெடுஞ்சாலைத்துறை), எஸ். ராஜாத்தி (சத்துணவுத் துறை) எஸ். குப்புசாமி (ஊரக

வளர்ச்சி துறை) ஆகியோரும், மாவட்டப் பொருளாளராக டி. மகாலிங்கமும் (பேரூராட்சித் துறை) தேர்வு செய்யப்பட்டனர்.

மாநிலத் துணைத் தலைவர் மொ.ஞானத்தம்பி மாநாட்டு நிறைவுரையாற்றினார். இறுதியாக மாவட்ட இணைச் செயலாளர் டி.மகாலிங்கம் நன்றியுரை கூற மாநாடு சிறப்பாக நிறைவுற்றது.

## மதுரை

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மதுரை மாவட்டத்தின் 15-ஆம் மாவட்ட மாநாடு 19/10/2024 (சனிக்கிழமை) காலை 9:30மணியளவில் மதுரை காமராஜர் பல்கலைக்கழக கல்லூரியில் (அவுட்போஸ்ட்) நடைபெற்றது. முதலில் பிரதிநிதிகள் மாநாடு நடைபெற்றது. மாவட்டத்தலைவர் ஜெ.மூர்த்தி தலைமை வகித்தார்.மாவட்ட இணைச்செயலாளர் மு.ராம்தாஸ் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் சி.க.சுஜாதா வரவேற்புரையாற்றினார்.

மாநில துணைப் பொதுச்செயலாளர் என். வெங்கடேசன் தொடக்கவுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் க.நீதிராஜா வேலை அறிக்கை வழங்கினார்.மாவட்டப்பொருளாளர் க.சந்திரபோஸ் வரவு செலவு அறிக்கை வாசித்தார். வேலை அறிக்கை மற்றும் பொருளாளர் அறிக்கை மீது விவாதம் நடைபெற்றது. காப்பீட்டு கழக ஊழியர் சங்கத்தின் மதுரை கோட்டப் பொதுச்செயலாளர் N.P.ரமேஷ்கண்ணன், வருமான வரித்துறை ஊழியர்கள் கூட்டமைப்பு (தமிழ்நாடு&பாண்டிச்சேரி)மாநிலத் தலைவர் R.R.ஷ்யாம்நாத் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். விவாதங்களின் தொகுப்புரைக்குப் பிறகு மாவட்ட நிர்வாகிகள் மற்றும் மாநில மாநாட்டு பிரதிநிதிகள் தேர்வு நடைபெற்றது.தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஆ.செல்வம் நிறைவுரையாற்றினார்.

மாவட்ட இணைச்செயலாளர் ஆ.பரமசிவன் நன்றியுரை வழங்கினார். உணவு இடைவேளைக்குப் பிறகு பொதுமாநாடு நடைபெற்றது. தல்லாகுளம் பொதுப்பணித்துறை அலுவலக வளாகத்திலிருந்து பேரணி தொடங்கியது. மதுரை துணைமேயர் தி.நாகராஜன் பேரணியை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

பொதுமாநாட்டிற்கு மாவட்டத்தலைவர் ஜெ.மூர்த்தி தலைமை வகித்தார். பெ.சந்திரபாண்டி வரவேற்புரையாற்றினார். மாவட்டத் துணைத்தலைவர்கள் ஜெ.மகேந்திரன், த.மனோகரன், மாவட்ட இணைச்செயலாளர்கள் ஆ.பரமசிவன், சி.பெரியகருப்பன், சு.பாண்டிச்செல்வி, மு.ராம்தாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்டச்செயலாளர் க.நீதிராஜா தீர்மானங்கள் முன்மொழிந்து விளக்கவுரையாற்றினார். தமிழ்நாடு உயர்நிலை - மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழக மாவட்டத் தலைவர் V.கணேசன், தமிழ்நாடு முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழகம் மாவட்டத் தலைவர் பா.பாண்டி, தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்க மாவட்டத்தலைவர் சு.கிருஷ்ணன், இந்திய தொழிற்சங்க மையத்தின் மாவட்டச்செயலாளர் இரா.லெனின் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஆ.செல்வம் நிறைவுரை வழங்கினார். இறுதியாக மாவட்டப் பொருளாளர் க.சந்திரபோஸ் நன்றியுரை வழங்க மாநாடு சிறப்புடன் நிறைவு பெற்றது.

## காஞ்சிபுரம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் காஞ்சிபுரம் மாவட்டத்தின் 14 ஆம் மாவட்ட மாநாடு கலைஞர் சமுதாயக்கூடம் குன்றத்தூரில் மாவட்டத் தலைவர் தோழர் வெ.லெனின் தலைமையில் நடைபெற்றது.

முதல் நிகழ்வாக மாவட்ட மாநாட்டு பேரணி மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் தோழர் தெ.வாசுகி கொடியசைத்து துவங்கி வைத்தார். குன்றத்தூர் நகராட்சி அலுவலகம் அருகில் இருந்து புறப்பட்டு மாநாட்டு

திடலில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கொடியினை மாவட்டத் தலைவர் தோழர் வெ.லெனின் அவர்களும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன கொடியினை மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் தோழர் தெ.வாசுகி அவர்களும் ஏற்றி வைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. மாநாட்டின் உள் அரங்க நிகழ்வில் அஞ்சலி தீர்மானம் தோழர் சீதா.சீனிவாசன் மாவட்ட துணைத் தலைவர் அவர்கள் முன்மொழிய இரண்டு நிமிடம் அஞ்சலி செலுத்தப்பட்டது. குன்றத்தூர் வட்ட கிளை செயலாளர் B.கௌதமி அனைவரையும் வரவேற்றார். மாநாட்டில் தோழர். உ.சுமதி. மாநில செயலாளர் துவக்க உரையாற்றினார். செயலாளர் அறிக்கையினை தோழர்.துரை. மருதன் மாவட்ட செயலாளர் அவர்களும் வரவு செலவு அறிக்கையினை மாவட்ட பொருளாளர் தோழர். வே.குமார் அவர்கள் முன்வைத்தார். தீர்மானங்கள் தோழர் S.ரமேஷ் தோழர் C.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்மொழிந்து பேரவையில் ஏகமனதாக ஒப்புதல் பெறப்பட்டது.

மாநாட்டில் தோழர் N.சாரங்கன் மேனாள் மாவட்ட தலைவர் கு.வெங்கட குரு மாவட்ட துணைத் தலைவர் TNGPA தோழர் V.நீலாவதி மாவட்டத் தலைவர் TNNMEA. தோழர் J.துரைவேல் மாவட்டத் தலைவர் TNGPA தோழர் கிருஷ்ணமூர்த்தி செங்கொடி சங்கம் தோழர்.V.ரமணி மாவட்ட செயலாளர் TNNMEA ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

அறிக்கை மீது விவாதத்தில் தோழர் A.சத்யா, தோழர் சுலோச்சனா, தோழர் G.K.விமலா, தோழர் மாதவன், தோழர் சித்திரை செல்வி ஆகியோர் கலந்து கொண்டார்கள். விவாதத்திற்கு செயலாளர் அறிக்கை மீது வந்த கருத்துக்களுக்கு மாவட்டச் செயலாளர் தோழர் துரை.மருதன் அவர்களும் வரவு செலவு அறிக்கை மீது வந்த கருத்துக்களுக்கு மாவட்ட பொருளாளர் தோழர் வே.குமார் அவர்களும் தொகுப் புரை வழங்கினார்.தொகுப்புரைக்கு பின் ஏக மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மகளிர் மாநாடு அமர்வு மாவட்டத் தலைவர் தோழர் வெ.லெனின் தலைமையில் நடைபெற்றது. வரவேற்புரை தோழர் எம். தேவிகா மாவட்ட மகளிர் துணை குழு அவர்கள் வரவேற்றார். மகளிர் மாநாட்டு அறிக்கை தோழர் எம் .ஆர்.திலகவதி மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளர் முன்வைத்தார். சிறப்புரை தோழர் கோ.கௌரி மாவட்ட பொருளாளர் TNPTF அவர்கள் தனக்கே உரித்தான பாணியில் கருத்துப் பாடலுடன் சேர்ந்து உரையாற்றினார். தோழர் பார்வதி மாவட்ட மகளிர் துணை குழு நன்றி கூறினார். தோழர் எம்.தங்கராஜ் மேனாள் மாநில பொருளாளர் சிறப்புரை ஆற்றினார். சிறப்புரைக்கு பின் புதிய நிர்வாகிகள் முன்மொழிவை மாவட்ட செயலாளர் முன் மொழிந்தார் பின் பேரவை உறுப்பினர்கள் ஏகமனதாக ஒப்புதல் பெறப்பட்டது.

புதிய நிர்வாகிகளை அறிமுகப்படுத்தி மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் தோழர் தெ.வாசுகி அவர்கள் நிறைவுரையாற்றினார்.

நிறைவாக தோழர். J.சண்முக வள்ளி நன்றி கூற மாநாடு நிறைவடைந்தது.

மாவட்டத் தலைவர் தோழர்..C.கிருஷ்ண மூர்த்தி (மருத்துவத் துறை) துணைத் தலைவர்கள் தோழர். சீதா.சீனிவாசன் (ஊரக வளர்ச்சித் துறை) தோழர். M.R.திலகவதி (சத்துணவுத்துறை) தோழர். வி.முத்து சுந்தரம் (ஊரக வளர்ச்சித் துறை) தோழர். G.தயாளன் (வருவாய்த்துறை) மாவட்டச் செயலாளர்

தோழர்.துரை.மருதன் (ஊரக வளர்ச்சித்துறை) இணைச் செயலாளர்கள் தோழர். எஸ் ரமேஷ் (வேளாண்மைத் துறை) தோழர். எஸ்.பாபு (வணிக வரித்துறை) தோழர். கோ.பூங்கொடி (இந்து சமய அறநிலையத்துறை) தோழர் M.பாரதி (வருவாய்த்துறை) பொருளாளர் தோழர். V.வெங்கடேஷ் (ஊரக வளர்ச்சித் துறை) மாவட்ட மகளிர் துணை குழு அமைப்பாளர் தோழர் எம்.ஆர்.திலகவதி ஆகியோர் ஒரு மனதாக தேர்வு செய்யப்பட்டார்கள்.

## கிருட்டினகிரி

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், கிருட்டினகிரி மாவட்டம், 8-ஆம் மாவட்ட மாநாடு 26.10.2023, சனிக்கிழமை அன்று தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க கட்டடத்தில் எழுச்சியுடன் நடைபெற்றது.

கொடியேற்ற முழக்கத்துடன் தொடங்கிய மாவட்ட மாநாட்டில் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் கொடியினை மாநில தலைவர் (பொ), தோழர். சா.டானியல்ஜெயசிங், அவர்களும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கொடியினை மாவட்ட தலைவர் தோழர். B.சந்திரன் அவர்களும் கொடியேற்றி வைத்து சிறப்பித்தனர். அதன் பின்பு தியாகிகள் ஸ்தூபிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு மாவட்ட மாநாடு துவங்கப்பட்டது. இம்மாநாட்டிற்கு மாவட்ட தலைவர் தோழர். B.சந்திரன் அவர்கள் தலைமை தாங்கினார். அஞ்சலி தீர்மானத்தை மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளர் தோழர். K.ஜெகதாம்பிகா அவர்கள் சமர்பித்தார். மாவட்ட துணை தலைவர் தோழர். K.கோபாலகண்ணன், அவர்கள் வரவேற்புரையாற்றினார், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில தலைவர்(பொ) தோழர். சா. டானியல் ஜெயசிங், அவர்கள் துவக்க உரையாற்றி பேரவையை துவக்கி வைத்தார். பின்னர் செயலாளர் அறிக்கையினை மாவட்ட செயலாளர் தோழர். சி.கல்யாணசுந்தரம், அவர்களும், பொருளாளர் அறிக்கையினை மாவட்ட பொருளாளர் தோழர். ம.நந்தகுமார், அவர்களும் சமர்ப்பித்தனர். அறிக்கை மீதான விவாதத்தில் ஐந்து தோழர்கள் பங்கேற்றனர். அறிக்கை மீதான விவாதங்களுக்கு தொகுப்புரை வழங்கிய பின்பு அறிக்கைகளுக்கு ஏக மனதாக கரவொலி மூலம் ஒப்புதல் பெறப்பட்டது.

வாழ்த்துரை: தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர். G. ஜெய்சங்கர் அவர்களும், தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர் முன்னேற்ற சங்கத்தின் மாவட்ட தலைவர் தோழர். A.பூபதி அவர்களும், தமிழ்நாடு நகராட்சி மாநகராட்சி அலுவலர் சங்கத்தின் மாநில துணை தலைவர் தோழர். G.வெங்கடேசன், அவர்களும், பொது சுகாதாரத்துறை அலுவலர் சங்கத்தின் மாநில செயலாளர் தோழர். S.கந்தசாமி அவர்களும், தமிழ்நாடு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கத்தின் மாநில மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர்.K.தேவிசோனா, அவர்களும் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினார்கள். நடவடிக்கை மற்றும் கோரிக்கை தீர்மாணங்கள் மாவட்ட துணைத் தலைவர்கள் தோழர் K.ராமச்சந்திரன், தோழர், S.முருகேசன், தோழர். K.ஜெயலட்சுமி, ஆகியோரும், மாவட்ட இணை செயலாளர்கள் தோழர். R.M.மஞ்சுளா, தோழர் A.மணி, தோழர். C.கோவிந்தராஜ், ஆகியோரும் முன்மொழியப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதனை தொடர்ந்து புதிய மாவட்ட நிர்வாகிகள் பெயர் முன்மொழியப்பட்டு தேர்வு செய்யப்பட்டனர்.

மாவட்ட தலைவர் : தோழர். பி. சந்திரன், மருத்துவதுறை மாவட்ட துணை தலைவர்களாக: தோழர்கள். K. ஜெகதாம்பிகா, சத்துணவு திட்டம் K.கோபாலகண்ணன், ஊரக வளர்ச்சித் துறை, C.கோவிந்தராஜ், கூட்டுறவுத்துறை, E.ஜெயபிரபா, வருவாய்த்துறை.

செயலாளர்: தோழர். சி.கல்யாணசுந்தரம், பட்டு வளர்ச்சித்துறை. இணை செயலாளர்கள்: தோழர்கள். M.நந்தகுமார், மீன்துறை, S.முருகேசன், நெடுஞ்சாலை துறை, A.பெரியசாமி, நில அளவைத்துறை, K.ஜெயலட்சுமி, கிராம சுகாதார செவிலியர், பொருளாளர்: தோழர். K.C.A. தினேஷ், பொது சுகாதாரம், மாவட்ட தணிக்கையாளர்கள்: தோழர்கள். K.பெருமாள். U.சும்சுல் ஆலம். ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். நிறைவாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மேனாள் மாநில தணிக்கையாளர் தோழர். R.நடராஜன், அவர்கள் நிறைவுரையாற்றி சிறப்பித்தார். இறுதியாக தோழர். K.பெருமாள், வட்ட தலைவர், கிருட்டினகிரி அவர்கள் நன்றியுரையாற்றி மாநாட்டை நிறைவு செய்தார்.

●

நூல் அறிமுகம்

# “பூமிப்பந்து சந்தித்திராத போராட்டம்”

**- ம. அந்தோணிசாமி**

நூல் ஆய்வு கட்டுரை. நூலின் ஆசிரியர் இரா. ஜோதி அவர்களுக்கு முதலில் பாராட்டுகளை உரித்தாக்குகிறேன். 708 விவசாயிகளின் உயிர் தியாகத்தால் விவசாயிகளின் வாழ்க்கையை அழிக்கும் மக்கள் விரோத புதிய விவசாய சட்டங்கள் வாபஸ் பெறப்பட்டது என்பதை நூலில் வலுவாக கூறியுள்ளார். தியாகத்தால் மட்டுமே மக்களின் துன்பத்தை விரட்ட முடியும் என்பதற்கு இப் போராட்டம் ரத்த சாட்சியாக உள்ளது. இதனை நூலாசிரியர் பல அத்தியாயங்களில் பதிவு செய்துள்ளார். தோழர் ஹண்ணன் முல்லா கூறிய வார்த்தைகள் நீதிமன்றம் எடுக்கும் எந்த முடிவாக இருந்தாலும் விவசாயிகளுக்கு எதிராக இருந்தால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது. அதற்காக சிறை செல்லவும் தயார் என்று கூறிய வார்த்தைகள் உண்மையில் போராடும் விவசாயிகளை உணர்வு மிக்கவர்களாக மாற்றி மேலும் போராட வைத்துள்ளது.

போராட்டம் தொடரும் என்று நூலின் கடைசி அத்தியாயம் கூறுவது உண்மையில் தொடர்ந்து போராட வேண்டும் என்ற உணர்வை ஊட்டும் வகையில் இன்றைய அரசியல் பொருளாதார நிலைமைகளை சுட்டிக்காட்டி உள்ளார் ஆணவம் வீழ்ந்தது என்ற தலைப்பில் உள்ள அத்தியாயத்தில் இந்த நாட்டின் மிக உயர்ந்த பதவியில் உள்ள பிரதமர் எந்த அளவிற்கு மக்களிடம் உண்மைக்கு மாறாக பேச முடியும் என்பதை சுட்டி காட்டியதும், போராட்டத் தலைமை கூட்டு முடிவாக போராட்டத்தை விளக்கிக் கொண்டதும், பிரதமர் தன்னிச்சையாக சட்டம் வாபஸ் என அறிவித்ததும் இந்த நாட்டின் ஜனநாயகம் யாரிடம் இருக்கக் கூடாது என்பதை ஆழமாக கூறியுள்ளது இந்நூலில் டிராக்டர் பேரணியில் உள்ள விவரங்கள் ஆழ்ந்து கற்று உணர வேண்டியபாடமாகவும் தேடுதலாகவும் உள்ளது.




பூமிப்பந்து சந்தித்திராத போராட்டம்
- இரா.ஜோதி

பரந்துபட்ட ஒற்றுமை, போராட்டங்களின் அணிவகுப்பு, பெண் விவசாயிகள் தினம் ஒவ்வொன்றையும் பகுத்தறிய வேண்டிய பாடக்குறிப்புகள். நான் படித்ததில் எனக்கு ஏற்பட்ட உணர்வு உலகைக் குலுக்கிய 10 நாட்கள் நூலினை படித்திருக்கின்றேன்.தோழர். லெனின் நவம்பர் 7னை குறிக்கும்போது ஏற்பட்ட விவாதம் சம்யுக்த கிசான் மோச்சாவின் போராட்ட விவாதங்கள் ஏறக்குறைய ஒன்று போல் உணர்கிறேன்.

இப் போராட்டம் குறித்து புத்தகத்தின் வாயிலாக போராடும் அமைப்புகளுக்கும், இளம் மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும், ஆழ்ந்த புரிதலை உருவாக்க ஆய்வு நோக்கில் பயிற்சி பட்டறைகள் தேவை. விவசாயிகளின் போராட்ட உணர்வு இந்திய நாட்டை பாதுகாத்துள்ளது. இந்த உணர்வை நாமும் ரத்தத்தில் சூடேற்றுவோம் அக்கினி குஞ்சுகளை உருவாக்குவோம். அனைவரும் இந்த நூலை கட்டாயம் வாங்கி படிப்பது போராடக்கூடிய நம்மைப் போன்றவர்களுக்கு ஒரு பாடமாக அமையும் என்பதில் வேறுபட்ட கருத்து இல்லை.எழுத்து நடை ஒருசில இடங்களில் ஆர்.ஜே அவர்களின்பேச்சு நடை போல் அமைந்துள்ளது. ●

# தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி

# மாலை நேர தர்ணா 8.10.2024

## திருநெல்வேலி

திருநெல்வேலி மாவட்டம் திமுக தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற வலியுறுத்தி தமிழக முதல்வரின் கவனம் ஈர்த்திடும் வகையில் மாநிலந்தழுவிய ஆர்ப்பாட்டம் அரசு ஊழியர்கள்! அனைவருக்கும் வணக்கம்!

தமிழக முதல்வர் கடந்த சட்டமன்ற தேர்தலில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு தந்த வாக்குறுதிகளையும், உறுதிமொழிகளையும் நிறைவேற்றிட வலியுறுத்தி தொடர்ந்து பல்வேறு கட்ட போராட்டங்களை நடத்திய பிள்ளரும் நாளது வரை தீர்வு காணப்படாத நிலையே நீடிக்கிறது. காலிப்பணியிடங்களை கால முறை ஊதியத்தில் நிரப்பாமல் இருப்பது. அனைவருக்கும் பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்தாமல் இருப்பது, சரண்டர் விடுப்பினை மறுப்பது என்ற தேர்தலுக்கு முந்தைய நிலையே தொடர்கிறது. எனவே நிலுவையிலுள்ள 8 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி 08.10.2024 அன்று தமிழ்நாடு முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் மாபெரும் தர்ணா ஆர்ப்பாட்டம் இன்று மாலை 5.00 மணிக்கு திருநெல்வேலி சித்த மருத்துவ கல்லூரி முன்பு வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது

## திருவாரூர்

தமிழ்நாடு அரசு ஊழியர்சங்கம் திருவாரூர் மாவட்டம். திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக தமிழக முதல்வரின் தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி மாலை நேர தர்ணா மாவட்ட தலைவர் எஸ்.செங்குட்டுவன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் தோழர். பிரகாஷ் கோரிக்கைகளை விளக்கி பேசினார்.

தமிழ்நாடு அரசு ஊழியர்சங்க முன்னாள் மாநில செயலாளர் எம்.செளந்தரராஜன் போராட்டத்தை துவக்கிவைத்தார்.

தமிழ்நாடு அனைத்து துறை ஓய்வூதியர் சங்க மாநில செயலாளர் தோழர்.குரு. சந்திரசேகரன் நிறைவுரையாற்றினார். மாவட்ட பொருளாளர்.வி.தெட்சிணாமூர்த்தி நன்றி கூறினார். இதில் நிர்வாகிகள் தோழர்கள் மகாலிங்கம், விஜயன்,ராஜசேகர்,விஜய்ஆனந்த், செந்தில், தம்பிதுரை, தமிழ்சுடர், பரமேஸ்வரி, மகாலெட்சுமி உள்ளிட்ட தோழர்கள் கலந்துகொண்டனர்.

## மயிலாடுதுறை

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மைய முடிவின்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தேர்தல் கால வாக்குறுதியை நிறைவேற்ற வலியுறுத்தி இன்று (08.10.2024) மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் மாலைநேர தர்ணா போராட்டம் மாவட்டத் தலைவர் தோழர் R.சிவபழனி தலைமையில் நடைபெற்றது.

மயிலாடுதுறை வட்டத் தலைவர் தோழர் B.ராஜமோகன் வரவேற்புரையாற்றினார். TARATDAC மாவட்டத் தலைவர் தோழர் D.கணேசன் துவக்கவுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் தோழர் D.இளவரசன் விளக்கவுரையாற்றினார். மேனாள் மாவட்ட துணைத் தலைவர் தோழர் M.நடராஜன், TNROA மாவட்டச் செயலாளர் தோழர் S.தென்னரசு, TNSOU மாவட்டத் தலைவர் தோழர் R.முருகானந்தம், TNNMEA மாவட்டத் தலைவர் தோழர் K.ராமதேவன், TNHREA மாவட்டத் தலைவர் தோழர் S.ரமேஷ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். TNRDOA மேனாள் மாநிலப் பொருளாளர் தோழர் V.நாகராஜன் நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் தோழர் R.கலா நன்றியுரையாற்றினார்.

பங்கேற்பாளர்கள் விவரம்: பெண்கள் - 75 ஆண்கள் - 31 மொத்தம் - 106 பேர் தர்ணாவில் பங்கேற்றனர். மாவட்டச் செயலாளர்.

## விழுப்புரம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், பதிவு எண்.237/1984 விழுப்புரம் மாவட்டம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில செயற்குழு முடிவின் அடிப்படையில் தமிழக முதல்வரின் தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றிட வலியுறுத்தி விழுப்புரம் மாவட்ட மையத்தின் சார்பில் மாவட்டத் தலைவர் தோழர் கு.சரவணன் தலைமையில் மாலை பெற தர்ணா போராட்டம் விழுப்புரம், புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள நகராட்சி திடலில் 08.10.2024 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. மாவட்ட இணை செயலாளர் தோழர் எம்.மகேஸ்வரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.தமிழ்நாடு வேளாண்மைத்துறை அமைச்சுப் பணியாளர் சங்க முன்னாள் மாநில துணைத்தலைவர் தோழர் ஆ.ஜா. பார்த்தீபன் துவக்க உரையாற்றினார்.

தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் ஆர். பொன்முடி, தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாவட்ட செயலாளர் தோழர் கே.முருகன், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்க மாவட்ட செயலாளர் தோழர் ஜெ.ஜெய்சங்கர், தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு மாவட்ட துணைத் தலைவர் தோழர் சையத் அஹமது, தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர்கள் முன்னேற்ற சங்க மாவட்ட தலைவர் தோழர் பெ.வள்ளல்பாரி, தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் தோழர் தி.ஜெயந்தி தமிழ்நாடு பட்டு வளர்ச்சித்துறை ஊழியர் சங்க மாவட்ட தலைவர் தோழர் பி.எம் சுந்தரம், தமிழ்நாடு பேரூராட்சி ஊழியர் சங்க மாநிலச் செயலாளர் தோழர் எஸ். பாலமுருகன், தமிழ்நாடு மக்கள் நல பணியாளர் சங்க மாவட்ட தலைவர் (பொறுப்பு) தோழர் ஜெயகாந்தன், தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்க கண்டாச்சிபுரம் வட்ட தலைவர் தோழர் கருப்பு சட்டை ஆறுமுகம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இந்திய தொழிற்சங்க மையத்தின் விழுப்புரம் மாவட்ட செயலாளர் தோழர் ஆர். மூர்த்தி நிறைவுரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்ட பொருளாளர் தோழர் எஸ்.ரத்தினம், மாவட்ட துணைத் தலைவர்கள் தோழர் மு.குமாரதாஸ் தோழர் எம்.எம்.அண்ணாதுரை, மேல்மலையனூர் வட்ட செயலாளர் தோழர் சண்முகம், செஞ்சி வட்ட செயலாளர் தோழர் அ.ரவிக்குமார், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஊராட்சித் துறை அனைத்து ஓய்வூதியர் சங்க மாவட்ட செயலாளர் தோழர் நா.அறவாழி, தமிழ்நாடு அரசு புள்ளிஇயல் சார்நிலை அலுவலர் சங்க மாநிலச் செயலாளர் தோழர் இரா.சிவக்குமார், தமிழ்நாடு அரசு சுகாதார போக்குவரத்து துறை ஊழியர் மாவட்ட செயலாளர் தோழர் அ.அஜிஸ், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்க மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் ஜெ.ரமேஷ், தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாவட்ட துணை தலைவர் மே.சாருமதி, தமிழ்நாடு பட்டு வளர்ச்சித்துறை ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் தோழர் நந்தகுமார், தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு உதவியாளர் முன்னேற்ற சங்க மாவட்ட செயலாளர் தோழர் அக்பர், தமிழ்நாடு சாலைப் பணியாளர் சங்க நிர்வாகிகள் தோழர் ஜெயராமன், தோழர் சரவணபவன், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட பொருளாளர் தோழர் பி.சத்யா, இணை செயலாளர்கள் தோழர் எஸ்.சுமதி, தோழர் அ.உமா, தமிழ்நாடு பேரூராட்சி ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் தோழர் இர.சுதாகர், தி ரேடியாலஜிக்கல் அசிஸ்டென்ட் அசோசியேஷன் விழுப்புரம் மாவட்ட நிர்வாகி தோழர் அருள், BRC பொறியாளர் சங்கம் தோழர் தினகர், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க திண்டிவனம் வட்டக் கிளை தலைவர் தோழர் இரா. விஜயகுமார், செஞ்சி வட்ட பொருளாளர் தோழர் ப. திருவேங்கடம், விழுப்புரம் வட்ட செயலாளர் தோழர் செ. திருமாவளவன், இணை செயலாளர் தோழர் குபேரன் உள்ளிட்ட அனைத்து துறை சார்ந்த நிர்வாகிகள், ஓய்வூதியர் சங்க வட்ட/ மாவட்ட நிர்வாகிகள் உள்ளிட்டோர் திரளாக பங்கேற்றனர்

இறுதியாக மாவட்ட பொருளாளர் தோழர் க.அன்பழகன் நன்றி உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் 45 மகளிர் உள்ளிட்ட 110 தோழர்கள் பங்கேற்றனர்

## ராமநாதபுரம்

ராமநாதபுரம் மாவட்டத்தில் மாவட்டத் தலைவர் தோழர் மு முருகேஸ்வரி தர்ணா போராட்டத்திற்கு தலைமை தாங்கினார். கோரிக்கைகளை வலியுறுத்தி மாநில செயற்குழு உறுப்பினர் எம். திருமுருகன் பேசினார் கோரிக்கைகளை வலியுறுத்தி TNGEA முன்னாள் மாவட்ட தலைவர் மு.கருணாநிதி, கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் . தோழர் விஜயராமலிங்கம், தமிழ்நாடு நில அளவை ஒன்றிப்பின் மாவட்ட தலைவர் தோழர் து.வினோத் குமார், புள்ளியியல் சார்நிலை அலுவலர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர் மெய்ய சக்தி ஆகியோர் தர்ணா போராட்டத்தை வாழ்த்தி பேசினார்கள் இறுதியாக மாவட்ட பொருளாளர் தோழர் எச் அப்துல் நஜீம் நன்றி உரை ஆற்றினார்.

## திருச்சிராப்பள்ளி

இன்று மாலை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட தலைநகரங்களில் மாலை நேர தர்ணா போராட்டம் மாவட்ட தலைவர் பால் பாண்டி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட இணை செயலாளர் அமுதவல்லி வரவேற்புரையாற்றினார். மாவட்டச் செயலாளர் பாபு கோரிக்கை விளக்கவுரையாற்றினார்.

வருவாய் துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர் மாடசாமி, சத்துணவு ஊழியர் சங்கத்தின் செயலாளர் தோழர் அல்போன்ஸ், சாலைப் பணியாளர் சங்கத்தின் மாவட்ட தலைவர் தோழர் ஜீவானந்தம், அரசு தொழிற்பயிற்சி அலுவலர் சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் நவநீதன், ஓய்வு பெற்ற சத்துணவு அங்கன்வாடி ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் கே.எம.ராஜேந்திரன் மற்றும் அனைத்து துறை ஓய்வூதிய சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் எம்வி செந்தமிழ்ச் செல்வன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். மாநில துணைத் தலைவர் பெரியசாமி தர்ணா போராட்டம் சிறப்புரையாற்றினார். வட்டக்கிளை தலைவர் சுரேஷ் பிரபு நன்றி கூறினார். தர்ணா போராட்டத்தில் அனைத்து துறை ஊழியர்களும் கலந்து கொண்டார்கள்.

## தஞ்சை

தஞ்சை மாவட்டத்தின் சார்பில் 08.10.2024 மாலை நடைபெற்ற மாலை நேர தர்ணா போராட்டத்தில் மாவட்டத் தலைவர் பா.முருகன் தலைமை வகித்தார். துணைத்தலைவர்கள் டி.ரவிச்சந்திரன், ஏ.ஆர்.கவிதா, மாவட்ட இணைச் செயலாளர்கள் ஏ.செந்தில்குமார், எஸ். மகேஷ், ஏ.தமிழ்வாணன், டி.இளங்கோவன் ஆகியோர் முன்னிலை வகிக்க, மாவட்டச் செயலாளர் ஆ.ரெங்கசாமி கோரிக்கை விளக்கவுரையாற்றினார். மாநிலச் செயலாளர் எஸ்.கோதண்டபாணி நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் கு.பாஸ்கரன் நன்றியுரை வழங்கினார். இந்த மாலை நேர தர்ணாவில் 80 பெண்கள் 70 ஆண்கள் என மொத்தம் 150 பேர் கலந்து கொண்டனர்.

## கடலூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மைய முடிவின்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் தேர்தல் கால வாக்குறுதியை நிறைவேற்ற வலியுறுத்தி 08.10.2024 கடலூர் பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக மாலைநேர தர்ணா போராட்டம் மாவட்டத் தலைவர் தோழர் D. இரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டச் செயலாளர் தோழர் எல்.அரிகிருஷ்ணன் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தை வாழ்த்தி தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்க மாவட்ட

தலைவர் தோழர் என்.காசிநாதன், துணை தலைவர் S. கருணாகரன், வட்ட செயலாளர் ஜெ.இராமதாஸ் பொதுப்பணித்துறை கணக்கு மற்றும் ஆட்சிஅலுவலர் பணியாளர் சங்க மாநில செயலாளர் இராம.வெங்கடாஜலபதி தமிழ்நாடு அரசு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்க மாநில பொருளாளர் எஸ். பாலகிருஷ்ணன், தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட செயலாளர் எஸ்.சாந்தகுமார், தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலைத்துறை சாலை ஆய்வாளர் சங்க மாநில துணை தலைவர் ஆர். குலோத்துங்கள், தமிழ்நாடு அரசு அணைத்து மருந்தாளுநர் சங்க மாவட்ட தலைவர் கு.பொற்செழியன், தமிழ்நாடு அரசு கால்நடை ஆய்வாளர் சங்க மாவட்ட செயலாளர் D - ஏழுமலை, தமிழ்நாடு அரசு சமூகநலத்துறை ஊழியர் சங்க தோழர் குமாரவேல், கடலூர் மாநகராட்சி துப்புரவு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் D.செல்வராஜ், நெடுஞ்சாலைத்துறை சாலை பணியாளர் சங்க என்.ராமர், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாவட்டதலைவர் A.நாகம்மாள் ஆகியோர் பேசினார்கள், இறுதியாக மாவட்ட பொருளாளர் எஸ்.வெங்கடேசன் நன்றி கூறினார். ஆர்ப்பாட்டத்தில 13 பெண்கள் உட்பட 57 தோழர்கள் கலந்துக்கொண்டனர்.

## தருமபுரி

தேர்தல்கால வாக்குறுதியை நிறைவேற்ற கோரி அரசு ஊழியர் சங்கம் தர்ணா போராட்டம் அக்-8, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாநிலம் தழுவிய தர்ணா போராட்டம் நடைபெற்றது.

## வட சென்னை – தென் சென்னை

தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கம் வட சென்னை மற்றும் தென் சென்னை மாவட்ட மையம் சார்பில் ஒருங்கிணைந்த நிதித்துறை வளாகத்தில் 8-10-2024 அன்று மாலை 5 மணிக்கு தர்ணா ஆர்ப்பாட்டம் வட சென்னை மாவட்ட தலைவர் தோழர் வே. விஜய் குமரன் மற்றும் தென் சென்னை மாவட்ட தலைவர் தோழர் சி. கலைச்செல்வி ஆகியோர் கூட்டு தலைமையில் நடைபெற்றது.

தோழர் ம.சாலக்குமார், தென் சென்னை மாவட்ட துணைத் தலைவர் வரவேற்புரை வழங்கினார்.தோழர் N.ரமேஷ், பொதுச் செயலாளர், TNITOA அவர்கள் தர்ணா போராட்டத்தை தொடங்கி வைத்து உரையாற்றினார். தென் சென்னை மாவட்ட செயலாளர் தோழர் த.முத்துகுமாரசாமிவேல் மற்றும் வட சென்னை மாவட்ட செயலாளர் தோழர் ம. அந்தோனி சாமி ஆகியோர் கோரிக்கையை விளக்கவுரை வழங்கினர்.

ஆ.கோபிநாதன், மாநில செயலாளர் ,TNGMLTA, சு. மலர்விழி, மாநில துணைத் தலைவர், TNSWDEA, து. அஸ்வினி கிரேஸ் ஜெபப் பிரியா, மாநில துணைத் தலைவர், TNNMEA, சு. கண்ணன், பொதுச் செயலாளர்,TNGHTDEA ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அரசு ஊழியர் சங்கத்தின் மாநில தலைவர் (பொறுப்பு) நிறைவுரை வழங்க வட சென்னை மாவட்ட பொருளாளர் தோழர் த.ஏழுமலை அவர்கள் நன்றியுரை வழங்கினார். இந்த தர்ணா போராட்டத்தில் 85 பேர் கலந்துக் கொண்டனர். ●

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com

# தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி
# மாலை நேர தர்ணா 8.10.2024


கள்ளக்குறிச்சி


திருவாரூர்


அரியலூர்


இராணிப்பேட்டை



விருதுநகர்


ஈரோடு


நீலகிரி


காஞ்சிபுரம்


கரூர்


நாகப்பட்டினம்


தஞ்சாவூர்


திருவண்ணாமலை

Registered Postal Registration No. TN/CH/(C)/200/2024-2026 WPP.No.TN/PMG(CCR)/
WPP-431/2024-2026 RNI No.68584/81 Posted at Egmore RMS-1 Pathirika Channel
Date of Publication 1st Week of Every Month - Posted on 11.11.2024

# மாவட்ட மாநாடுகள்

























## தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி மாலை நேர தர்ணா 8.10.2024









Printed and Published by M.Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai-600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai-600002.
Editor: A.SELVAM. Phone: 28441286 E-mail: arasuoozhiyar@gmail.com